விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 07 திங்கட்கிழமை (23.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தமிழர் பிரச்சினை தொடர்பில்
# அரசுடன் பேசத் தயார் - விக்கி
# கூட்டமைப்புடன் பேசத் தயார் - பசில்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசுடன் பேசத் தயார் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்த நிலையில், வடக்கில் பெருவெற்றியீட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயலாற்றவும், பேச்சுவார்த்தைக்கும் தயார் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## அதிகூடிய விருப்பு வாக்கு விக்னேஸ்வரனுக்கு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் ஒருலட்சத்து 32 ஆயிரத்து 255 அதி கூடிய விருப்பு வாக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனை சந்திக்கிறார் மகிந்த

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்திக்க உள்ளார்.

ஜனாதிபதி நேற்றுக் காலை நியூயோர்க்கிற்கான விஜயத்தை ஆரம்பத்துள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் நோக்கில் (19ஆம் பக்கம் பார்க்க)

## மெட்ராஸ் க.'.பே திரைப்படம் யாழில்

(யாழ்ப்பாணம்)

இந்தியா உள்ளிட்ட பல நாடுகளல் ஈழம் தொடர்பான விட யங்களை கொச்சைப்படுத்துவதாக சர்சையை ஏற்படுத்திக் கொண்டிருக்கு மெட்ராஸ் கஃபே திரைப்படம் யாழ்ப பாணத்தில் முக்கிய நகரங் களில் அமைக்கப்பட்டுள்ள எல்.சி.டி பனல் மூலம் திரையிடப்பட்டு வருகின்றது. (19ஆம் பக்கம் பார்க்க)

## நவியின் கருத்துக்கள் மிகவும் சரியானவை
### ஏற்றுக்கொள்கிறார் தமரா குணநாயகம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்து நாட்டிலிருந்து வெளியேறும் போது வெளியிட்ட கருத்துக்களை தான் ஏற்றுக் கொள்வதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிநிதியும் கியூபா தூதுவருமான தமரா குணநாயகம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நவநீதம்பிள்ளை இலங்கையின் பௌதிக அபிவிருத்தி பற்றி அவதானிக்க வரவில்லை. நாட்டின் தேசிய பிரச்சினை தொடர்பில் பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் தொடர்பாக கண்காணிக்கவே வந்தார்.

போரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு நிர்வாகத்தில் அமெரிக்கா கரிசனை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உரிய சிவில் நிர்வாகத்தை ஸ்தாபிப்பதற்கும் நல்லிணக்க நடைமுறையை முன்னெடுப்பதற்கும் வன்முறை மற்றும் அச்சுறுத்தல் இன்றிய நடைமுறையானது அவசியமானதாகும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மாகாண சபை தேர்தல் முடிபுகள் குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, (19ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஓரிரு நாட்களில் பதவியேற்பார்

(யாழ்ப்பாணம்)

இன்னும் ஒரு சில நாட்களில் முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரன் பதவியேற்கவுள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவித்துள்ளார்.

வடக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமோக வெற்றியினையடுத்து முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று பி.ப.2 மணியளவில் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இச் சந்திப்பிலேயே சம்பந்தன் மேற்கண்ட அறிவிப்பினை விடுத்துள்ளார்.

எமது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இன்னும் சில நாட்களில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளார். அதன்போது மாகாண அமைச்சுக்கள் நியமிக்கப்பட்டு அதற்குரியவர்களிற்கான (02ஆம் பக்கம் பார்க்க)

## வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் - டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)



வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்களிடம் இருந்து பெற்ற ஆணையை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்வரவேண்டுமென்றும அவ்வாறு நிறைவேற்றினால் அதை நாம எமது (02ஆம் பக்கம் பார்க்க)

| மாவட்டங்கள் | த.தே.கூ | | ஐ.ம.சு.மு | | மு.கா | | ஐ.தே.க | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வாக்குகள் | ஆசனம் | வாக்குகள் | ஆசனம் | வாக்குகள் | ஆசனம் | வாக்குகள் | ஆசனம் |
| யாழ்ப்பாணம் | 213,907 | 14 | 35,993 | 02 | | | 855 | |
| கிளிநொச்சி | 37,079 | 03 | 7,897 | 01 | | | 54 | |
| முல்லைத்தீவு | 28,266 | 04 | 7,209 | 01 | 199 | | 197 | |
| மன்னார் | 33,118 | 03 | 15,104 | 01 | 4,571 | 01 | 187 | |
| வவுனியா | 41,225 | 04 | 16,633 | 02 | 1,991 | | 1,769 | |
| மொத்த எண்ணிக்கை | 353,595 | 28+2 | 82,836 | 07 | 6,761 | 01 | 3,062 | |

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதலமை...

கான பொறுப்புக்களும் வழங்கப் படவுள்ளது.

இப் பதவிப்பிரமாணத்தின் பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றினை நடத்தி மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவுபடுத் தப்படும் என்றார் அவர். (செ-4)

# வழங்கிய வாக்குறுதி...

மக்களின் நிரந்தர மகிழ்ச்சிக்காக வரவேற்கத் தயாராக இருப்பதாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்க முன்வந்திருப்பதும் நீதியானதும் நேர்மையானதுமான தேர்தலை நடத்த ஒத்துழைத்தமையும் வரவேற்கத்தக்க விடயம். அதற்காக நாம் வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இதேவேளை எமது வழிமுறைகளை ஏற்று எமக்கு வாக்களித்த மக்களுக்கும் விஷேடமாக நாம் நன்றி கூறுகின்றோம்.

மக்கள் எமக்கு ஆணை வழங்கினால் எமது நடைமுறைசார்ந்த வழிமுறை மூலம் மாகாணசபை அதிகாரத்தை பாதுகாத்து மேலும் பலப்படுத்துவதன் ஊடாக தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை அபிவிருத்தி படையினரை படிப்படியாக வெளியேற்றுதல் மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வியல் உரிமைகள் என நாம் சகலதையும் பெற்றுத் தருவோம் என மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கியிருந்தோம்.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமக்கு மக்கள் ஆணை வழங்கினால் இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றி மக்களை மீள்குடியேற்றம் செய்வதாகவும் அபிவிருத்தி மற்றும் அரசியலுரிமைகளை பெற்றுத் தருவதாகவும் மக்களுக்கு வழமை போல் வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை தமிழ் தேசியக கூட்டமைப்பினரே ஆணையாக பெற்றிருந்தனர்.

ஆகவே கடந்த காலங்களில் மக்களிடமிருந்து ஆணைகளைப் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியது போலன்றி வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை விரைவாக நிறைவேற்ற முன்வரவேண்டும்.

அவ்வாறு நிறைவேற்றும் பட்சத்தில் நாம் அதை எமது மக்களுக்காக அகமகிழ்வுடன் வரவேறபோம்.

இதனூடாகவே தமிழ் பேசும் மக்கள் தோற்றுப்போனவர்களல்ல என்ற நிலையை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் உருவாக்க முன்வரவேண்டுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"
(யோவான் 11:25)

## நன்றி செலுத்தும் வழிபாடு



கடந்த 24.08.2013 அன்று கர்த்தருக்குள்
நித்திரையடைந்த எங்கள் அன்புக் குடும்பத் தலைவர்

அமரர்

## தீயோகு அந்தோணிமுத்து

அவர்களின் வாழ்வுக்காக நன்றி செலுத்தும் வழிபாடு 23.09.2013 திங்கட்கிழமை யா / அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

82/16, பருத்தித்துறை வீதி,
3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (3987)

இங்ஙனம்
- குடும்பத்தினர் -


## பதவி வெற்றிடங்கள்



இலங்கையில் கடந்த 15 வருடங்களாக காப்புறுதி சேவையினையும் காப்புறுதி சம்பந்தமான சகல ஆலோசனைகளையும் வழங்கிவரும் கொழும்பைத் தலைமை நிலையமாக அமைந்த LM&A Insurance Brokers and Consultants (pvt) LTD (LM&A காப்புறுதித் தரகர் மற்றும் ஆலோசனை நிறுவனம்) வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் தனது கிளை அலுவலகத்தை திறந்து சிறப்பான சேவையினை வழங்கி வருகின்றது. இந் நிறுவனத்தின் விசேட அம்சம் யாதெனின் இலங்கையில் இயங்கிக்கொண்டிருக்கும் நிரல்படுத்தப்பட்ட தலைசிறந்த அரச மற்றும் தனியார் துறை காப்புறுதி நிறுவனங்கள் 12 இன் பொதுக்காப்புறுதி மற்றும் ஆயுட் காப்புறுதி திட்டங்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள வசதி செய்து தருகின்றது. இந் நிறுவனத்தின் கீழ் குறிப்பிட்ட பதவிகளுக்கு சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி மற்றும் தீவுப்பகுதி போன்ற பிரதேசங்களில் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

**பதவி நிலை 01 :- குழுமுகாமையாளர்கள் / குழுத்தலைவர்கள்**

அடிப்படை மாதாந்த சம்பளம், EPF, ETF, காப்புறுதி, தனிப்பட்ட ரீதியில், வியாபாரம் மேற்கொண்டால் அதற்கான Incentive மற்றும் மேலதிக அனுகூலங்கள் வழங்கப்படும்.

**தகைமைகள் :-** காப்புறுதித் துறையில் குறைந்தது 2 வருட அனுபவம் பதவிக்கு ஏற்ற கல்வித் தகமையுடன் குடும்பப் பின்னணி வலுவானதாக இருத்தல் வேண்டும்.

**பதவி நிலை 02 :- பிரதேச பிரதிநிதிகள்**

பகுதி நேரமாக பணியாற்ற விரும்புபவர்கள் (ஓய்வுபெற்ற அரச. தனியார்துறை ஊழியர்கள் மற்றும் அண்மையில் A/L பரீட்சை எழுதியவர்கள்.)

**பதவி நிலை 03 :- காப்புறுதி ஆலோசகர்கள்**

**பதவி நிலை 04 :- நிதித்திட்டமிடல் ஆலோசகர்கள்**

LM&A Insurance Brokers & Consultants (Pvt) Ltd. Company Registration No. PV 17257

பதவிநிலை 03, 04 இவை இரண்டிற்கும் காப்புறுதித்துறை சார்ந்த அல்லது விற்பனை துறை சார்ந்த அனுபவம் ஓரளவேனும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 10 10 2013

விண்ணப்பிக்கும் பதவியினை கடிதத்தின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.



அனுப்பவேண்டிய முகவரி
முகாமையாளர்
LM&A காப்புறுதி தரகர்
மற்றும் ஆலோசனை நிறுவனம்,
இல - 74, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-4787)



## AFTER AL! CIMA_UK,DIITEC@MCS

1.பரீட்சை பெறுபேறுவரையான காலத்தை பயனுள்ள கற்கைநெறிக்கு!
DIITEC(MSoffice, Web disinging, Hardware,Networking, English)
6 சான்றிதழ்கள்(NVQ level 3, University of Cambrigde,ICDL, MTA, University of colombo
2.உயர்ந்த தொழில்வாய்ப்பிற்கு CIMA -UK
(3 மாதம், UK பதிவுக்கட்டணம் 16000 ரூபா புலமைப்பரிசில்
3.கணினிப்பொறியிலாளராகி வெளிநாடுகளில் உயர் தொழில்வாய்ப்பைப்பெற்றுக்கொள்ள
MCSE_CCNA(இலங்கை அரசின் ICTA புலமைப்பரிசில்கள்)
புலமைப்பரிசிலிற்கு <NAME> <Course> என type செய்து 772 395 895க்கு sms செய்யவும்.
மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.

(4785)


# மன்னார்-தெரிவான உறுப்பினர்கள்

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**
எஸ். பிரமூஸ் சிறாய்வா
சட்டத்தரணி பாலசுப்பிரமணியம்
வைத்தியகலாநிதி என். குணசீலன்
**ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு**
றிப்கான் பதியுதீன்
**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**
றயீஷ்

மன்னார் தவிர்ந்த வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களின் உறுப்பினர்களும் விருப்பு வாக்குகளும் 18ஆம் பக்கத்தில்...


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*
*பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்*

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (மன்னார், வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...



- An international language, the language of culture
- A language for education, a language for job market
- A language that is fun to learn

➢ Just say "*Yes, I can... speak French*"

குறிப்பு: தற்போது *A/L* எடுத்த மாணவர்களுக்கு விசேட அனுமதிகள்...

புதிய வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும் (சனி, ஞாயிறு)
**61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093**
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 2006-ல் வவுனியா நகரசபைத் தேர்தலில் நான் வேட்பாளராக இருந்தபோது திருவாளர் செந்தில்நாதன் சுடப்பட்ட பின்னர் அன்று இரவு நான் இனந்தெரியாத துப்பாக்கி தாங்கியவர்களால் தேர்தலில் தோற்றவிடாது மிரட்டப்பட்டேன். அன்றிலிருந்து அரசியலை வெறுத்தேன். பா.உ.திருவாளர் ஆனந்தன் மீண்டும் மறு தேர்தலில் நிற்கும்படி கேட்டும் மறுத்தேன்.


2013-ல் எதிர்பாராத விதமாக வட மாகாணத் தேர்தலில் வேண்டாவெறுப்பாக வற்புறுத்தலின் போது மாற்றுக் கட்சியில் ஈடுபட்டு தேர்தலில் குதித்தேன்.

அதனால் நல்ல தமிழ் அரசியல்வாதிகளினதும் தமிழ் மக்களினதும் நம்பிக்கையிலும் விருப்பிலும் இருந்து விலக்கப்பட்டதாக உணர்கிறேன்.

தமிழ் நெஞ்சங்கள் தற்போது எடுத்த அதிரடி முடிவை யிட்டு ஆனந்தமடைகிறேன். தமக்கேற்ற சக்திவாய்ந்த ஆழம் காணமுடியாத அறிவாற்றல் மிக்க தலைமைப் பீடத்துடன் கூடிய குழுவை தேர்ந்தெடுத்துள்ளார்கள். இதுபோன்று எனது பழைய தமிழ்த் தேசியக் கட்சியுடன் சேர்ந்து உங்களுக்கு சேவை செய்யும் வாய்ப்பை வழங்குவீர்கள் என பிரான் நம்பி எனது அரசியலை தொடருகிறேன்.

A.M.K.தில்லைமோகன்

(4003)



# அன்பான தமிழ் மக்களே!

இன்றைய சூழலில் உங்கள் தீர்ப்பு சரியானதே அதை வரவேற்பதோடு என்னை நம்பி வாக்களித்த வாக்காளர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு எனது மக்களுக்கான சேவை ஓயாது தொடரும்....

அருள் ஜெயந்திரன்
(சன்ஜே)

(C-4786)

# இன்று ஒரு தகவல்

## உருவமும் உள்ளமும்

ஒரு முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தார். பல காலம் அப்படியே உட்கார்ந்து தவம் செய்து சக்தி பெற்று விட்டார். அதன் பின் ஒருநாள் இலேசாக கண்ணைத் திறந்து பார்த்தார்.

அவ்ரின் கண்ணுக்கு முன்னால் ஒரு எலி பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது!

"இந்த எலி ஏன் இப்படி நடுங்குகிறது? என்று யோசித்தார். உடனே அதற்கான காரணத்தையும் கண்டு பிடித்து விட்டார்.

அவருக்கு பின்னால் ஒரு பூனை நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்துதான் இந்த எலி நடுங்குகிறது! உடனே அந்த எலிக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்து தன்னுடைய தவவலிமையை பயன்படுத்தி அந்த எலியை ஒரு பூனையாக மாற்றிவிட்டார்.

இனிமேல் அந்த எலி பூனைக்காகப் பயப்பட வேண்டியதில்லை என்பதுதான் அவருடைய எண்ணம். இப்படிச் செய்துவிட்டு அந்த முனிவர் கண்ணை மூடிக் கொண்டார். மறுநாள் காலையில் லேசாகக் கண்ணைத் திறந்து பார்த்த போது இப்பொழுது அந்தப் பூனை பயந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

இது இன்னும் ஏன் இப்படி நடுங்கிறது என்று பார்த்தார். பின்னால் ஒரு நாய் நின்று கொண்டிருந்தது.

இப்பொழுது இதை ஒரு நாயாக மாற்றி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று நினைத்து அதை நாயாக மாற்றினார்.

மறுபடியும் மறுநாள் கண்ணைத் திறந்து பார்த்தார். இப்பொழுது அந்த நாயும் நடுங்கிக் கொண்டிருந்தது. அதற்கு காரணம் முனிவரின் பின்னால் நின்று கொண்டிருந்த நரி!

சரி... நாயை நரியாக்கிவிடுவோம்! இனியாவது அது நிம்மதியாக இருக்கும் என்று நினைத்தார். அந்த நம்பிக்கையும் நீடிக்கவில்லை. அந்த நரியும் நடுங்க ஆரம்பித்தது. என்னவென்று பார்த்தால்... பின்னால் ஒரு புலி நின்று கொண்டிருந்தது.

முனிவர் சளைக்கவில்லை...! நரியை புலியாக்கினார். இப்பொழுது அவர் மனதில் ஒரு நிம்மதி. கண்ணை மூடினார். மறு நாள் காலையில் வழக்கம் போல லேசாக கண்ணை முழித்துப் பார்த்தால், புலி நடுங்கிக் கொண்டிருந்தது.

முனிவருக்கு கோபம் வந்து விட்டது. புலியே நடுங்கக் கூடிய அளவுக்கு அப்படி ஒரு பயங்கரமான மிருகம் இருக்குமா...? என்று பின்னால் திரும்பிப் பார்த்தார்.

அங்கே ஒரு பூனை நின்று கொண்டிருந்தது! ஒரு பூனையைப் பார்த்து எலிபயப்படலாம். புலி பயப்படலாமா. இது ஏன் இப்படி நடுங்குகிறது. இப்பொழுதுதான் அவருக்கு ஒரு உண்மை விளங்கியது.

உருவத்தில்தான் அது புலி! உள்ளத்தில் அது இன்னும் எலிதான்! அதனால்தான் பூனையைப் பார்த்ததும் எலிக்கு உரிய பயம் வந்து விட்டது! இதைப் புரிந்து கொண்ட முனிவர் புலியை மறுபடியும் எலியாக மாற்றி அதைக் காப்பாற்றி பத்திரமாக அனுப்பி வைத்தார். ஒரு விடயத்தையும் புரிந்து கொண்டார்.

அதாவது "என்னதான் தெய்வீக வரம் கிடைத்தாலும் நான் இறைவனின் பிரதிநிதியே தவிர இறைவன் அல்ல!" என்பதை உணர்ந்தார். நம்ம ஆள் ஒருவன் மனைவிக்குப் பயந்து யாரும் கண்டுபிடிக்காதவாறு கரடி வேஷம் போட்டுக் கொண்டு காட்டுக்குப் போனான். அங்கே கிடைக்கும் காய்கனிகளை சாப்பிட்டு தவம் செய்தான்.

தவவலிமை கிடைத்த பின்புதான் வீட்டுக்குப் திரும்ப வேண்டும் என்று முடிவு செய்தான். ஒரு நாள் காலையில் முழித்துப் பார்த்தால் எதிரில் நிஜமான கரடி ஒன்று வந்து உட்கார்ந்திருந்தது.

இவன் பயந்து நடுங்கிப் போனான். இவர் நடுங்க ஆரம்பித்தவுடன், அந்தக் கரடி பேசத் தொடங்கியது.

"பயப்படாதே மாமா! நான் கரடி இல்லை... உன் மச்சான்... அக்கா தான் இந்த வேஷம் போட்டு உன்னை கண்டுபிடித்து கூட்டிக் கொண்டு வரச்சொல்லி அனுப்பி வைத்தார். வேடத்தைக் கலைத்து விட்டு வீட்டுக்கு புறப்படு!" என்றான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில்நுட்ப சேவையின் (ஆய்வுகூட உதவியாளர் பதவிக்கான) பயிற்சித் தரத்துக்கு வெளிவாரி விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்ப தகைமைகளாக க.பொ.த சாதாரண தரத்தில் தாய்மொழி மற்றும் விஞ்ஞானம் உட்பட மற்றுமொரு பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானத் துறையில் இரசாயனவியல் விஞ்ஞான பாடம் உட்பட இணைந்த கணிதம், பௌதிகவியல், உயிரியல், கமத்தொழில் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் க.பொ.த. உயர்தரத்தில் இரசாயனவியல், தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று அதாவது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஆய்வு கூட உதவியாளர் பதவி, அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்'' எனக் குறிப்பிட்டு "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை பத்தரமுல்லை எனும் முகவரிக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 600 தொகையை பிரதேச அல்லது மாவட்ட செயலகத்தில் விண்ணப்பதாரரின் பெயரில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இவ் விண்ணப்பப் படிவம் தொடர்பான மேலதிக விபரங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வெளியாகும் வர்த்தமானி பத்திரிகையில் அல்லது வலம்புரி காரியாலயத்தில் பார்வையிட முடியும். (அ-7)

# காதிகள் சபையில் வெற்றிடங்கள்

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் காதிகள் சபையில் நிலவும் தலைவர் மற்றும் அங்கத்தவர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பதவிகளுக்கான விண்ணப்பதாரர் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வு பெற்ற பதவி நிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப்பற்றி ஒழுகுபவராகவும் 40 வயதுக்கு மேற்பட்டவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.

வர்த்தமானிப் பத்திரிகையில் வெளிவந்த விண்ணப்பப்படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **காதிச் சபை** எனக் குறிப்பிட்டு "நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், த.பெ.இல 573, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். இவ் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வெளியாகும் வர்த்தமானி பத்திரிகையில் அல்லது வலம்புரி காரியாலயத்தில் பார்வையிடலாம். (அ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 |
| தக்காளி | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 |
| கோவா | 60 | 80 |
| கரட் | 60 | 100 |
| பூசணி | 20 | 40 |
| புடோல் | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 |
| பாகற்காய் | 160 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 |
| பயற்றங்காய் | 40 | 50 |
| லீக்ஸ் | 60 | 100 |
| பீற்றூட் | 10 | 30 |
| கறிமிளகாய் | 40 | 60 |
| முருங்கைக்காய் | 140 | 120 |
| போஞ்சி | — | 120 |
| கீரை – 1 பிடி | 10 | 30 |
| தேசிக்காய் | 500 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 10 | 40-50 |
| இராசவள்ளி | 80 | 120 |

# இராசி பலன்

23.09.2013
(புரட்டாதி 07, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 4.47 மணிவரை
பரணி முன்னிரவு 9.41 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
மகாபரணி

**மேடம்** கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதிக்க வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகல பயணமொன்றை மேற்கொள்வீர்கள்.

**மிதுனம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்து காட்டுவீர்கள்.

**கடகம்** செய்தொழில் மேன்மையுண்டு, புதிய தகவல்கள் வந்து சேரலாம், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், ஆரோக்கியமான நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** பழைய கடன்களை குறைக்கும் எண்ணம் மேலோங்கும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்காலத்திற்கான புதிய திட்டமொன்றை மேற்கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு உட்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**துலாம்** களஸ்திர நன்மையுண்டு, சுற்றத்தாரின் வருகையுண்டு, எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** தேக நலனில் புத்துணர்வு பெறுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முக்கிய முடிவெடுப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**தனுசு** இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், கோயில் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், புதிய திட்டங்கள் கைகூடும்.

**மகரம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வாகன சுகமுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கும்பம்** காரிய நன்மையுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, சகோதர உதவிகள் அதிகமாகும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

வளவன்

## யாழ்ப்பாணம் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 7625 | 86.30% |
| ஐ.ம.சு.மு | 1099 | 12.44% |
| ஐ.தே.க | 35 | 0.40% |
| மற்றவை | - | |
| வாக்களிக்கப்பட்டவை | 8949 | 96.22% |
| நிராகரிக்கப்பட்டவை | 114 | 1.27% |
| செல்லுபடியானவை | 8835 | 98.73% |
| பதிவுசெய்யப்பட்டவை | 9301 | |

## கிளிநொச்சி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 756 | 82.26% |
| ஐ.ம.சு.மு | 160 | 17.41% |
| ஐ.தே.க | 1 | 0.11% |
| மற்றவை | 2 | 0.22% |
| வாக்களிக்கப்பட்டவை | 929 | 95.77% |
| நிராகரிக்கப்பட்டவை | 10 | 1.08% |
| செல்லுபடியானவை | 919 | 98.92% |
| பதிவுசெய்யப்பட்டவை | 970 | |

## முல்லைத்தீவு மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 646 | 81.26% |
| ஐ.ம.சு.மு | 146 | 18.36% |
| ஐ.தே.க | 2 | 0.25% |
| மற்றவை | 1 | 0.13% |
| வாக்களிக்கப்பட்டவை | 800 | 96.27% |
| நிராகரிக்கப்பட்டவை | 5 | 0.63% |
| செல்லுபடியானவை | 795 | 99.38% |
| பதிவுசெய்யப்பட்டவை | 831 | |

## வவுனியா மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 901 | 66.94% |
| ஐ.ம.சு.மு | 323 | 24.00% |
| ஐ.தே.க | 65 | 4.83% |
| மற்றவை | 57 | --- |
| வாக்களிக்கப்பட்டவை | 1371 | 97.79% |
| நிராகரிக்கப்பட்டவை | 25 | 1.82% |
| செல்லுபடியானவை | 1346 | 98.18% |
| பதிவுசெய்யப்பட்டவை | 1402 | |

## மன்னார் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 1300 | 70.19% |
| ஐ.ம.சு.மு | 408 | 22.03% |
| மு.கா | 135 | 7.29% |
| ஐ.தே.க | 7 | 0.38% |
| வாக்களிக்கப்பட்டவை | 1869 | 97.50% |
| நிராகரிக்கப்பட்டவை | 17 | 0.91% |
| செல்லுபடியானவை | 1852 | 99.09% |
| பதிவுசெய்யப்பட்டவை | 1917 | |

# ஒருவார காலத்துக்கு கூட்டம் நடத்த தடை

தேர்தல் நடைபெற்ற மாகாணங்களில் இன்று முதல் ஒரு வாரத்திற்கு கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. குறித்த பகுதிகளில் ஊர்வலங்கள் நடத்தப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் நிறைவு பெற்றதன் பின்னர் இதுவரையான காலப் பகுதியில் வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் எவ்வித அசம்பாவிதங்களும் பதிவாகவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஏ)

# மக்களின் ஆணையை நாம் வரவேற்கிறோம்

### தவராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் ஆணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறைவேற்றும் என எதிர்பார்க்கின்றேன் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளர் ஆ.சி. தவராசா தெரிவித்தார். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையினை வரவேற்கின்றேன்.

இங்கு ஜனநாயக சூழல் இல்லை. நீதியான தேர்தல் நடக்க வாய்ப்பில்லை என கூறியவர்களுக்கு இத்தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெற்று நல்லதொரு செய்தியினை வெளிப்படுத்தியுள்ளது.

தேர்தல் காலங்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளினையும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினையும் நிரூபித்து காட்ட வேண்டும். இவற்றினை பயன்படுத்தியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களிடம் வாக்களிக்குமாறு கோரியிருந்தது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கோரியதனை விட அதிகமாகவே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். ஆகையால் தமிழ் மக்களின் ஆணையினை கூட்டமைப்பு நிறைவேற்றும் என நம்புகின்றேன் என்றார் அவர். (எ-4)

# வவு. மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கூடியவர்கள் மோதிக் கொண்டனர்

### இருவர் படுகாயம்

வடமாகாண சபைத்தேர்தல் முடிவுகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவரும் பிராந்திய ஊடகவியலாளர் ஒருவரும் தாக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை 9 மணியளவில் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் திரண்ட சுமார் 150 இற்கும் மேற்பட்டோர் அவ்விடத்தில் கூடி நின்ற வேளை வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய போது நிலைமைகளை அவதானிப்பதற்காக அவ்விடத்துக்குச் சென்ற கபே தேர்தல் கண்காணிப்பு குழுவைச் சேர்ந்த கண்காணிப்பாளர் ஒருவர் மீதும் பிராந்திய ஊடகவியலாளர் மீதும் கைகலப்பில் ஈடுபட்டவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் காரணமாக கண்காணிப்பாளரான ரி.ரஜீபன் மற்றும் ஊடகவியலாளரான எஸ். எம்.சர்ஜான் ஆகியோர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற கலகம் அடக்கும் பொலிஸார் அங்கு கூடி நின்றவர்களை அங்கிருந்து அகற்றி மாவட்ட செயலக சூழலை சுமுகமான நிலைக்கு கொண்டு வந்தனர். இதற்கிடையே கபே அமைப்பினர் இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஏ)

# வடக்கில் கூட்டமைப்பின் வெற்றிக்கு ம.தி.மு.க.பொது செயலர் வாழ்த்து

இலங்கை வடக்கு மாகாண தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. மதிமுக பொதுச் செயலாளர் வைகோ வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் நடந்து முடிந்த மாகாண சபை தேர்தல்களில் வடக்கு மாகாணத் தேர்தலில் மொத்தம் உள்ள 36 தொகுதிகளில் 28 இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று இருக்கின்றது.

இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி படுதோல்வி அடைந்துள்ளது. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் 14 ஆசனங்கள், முல்லைத்தீவில் 4 ஆசனங்கள், வவுனியாவில் 4 ஆசனங்கள், கிளிநொச்சியில் 3 ஆசனங்கள், மன்னாரில் 3 ஆசனங்கள் பெற்று 28 தொகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றி பெற்றுள்ளது.

தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன் கொலை செய்யும் நோக்கோடு அனந்தி சசிதரன் (எழிலன்) தாக்கப்பட்டுள்ளார்.

தந்தை செல்வா காலத்தில் இலங்கை அரசு அறிவித்த மாகாண சபை அதிகாரங்கள் இப்போது மாகாண சபைகள் மூலம் கிடைக்காது.

வடக்கு மாகாணத்தில் தமிழர்களின் மறுவாழ்வுக்கு இலங்கை அரசு செயற்படுவதாக இலங்கை ஜனாதிபதி செய்த பொய்ப் பிரச்சாரத்தையும் இராணுவம் பொலிஸ் மற்றும் வன்முறையாளர்களைக் கொண்டு ஏவிய அடக்குமுறை அச்சுறுத்தலையும் மீறி ஈழத் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய வாக்குகள் இலங்கை அரசிற்கு எதிரான வாக்குகளே ஆகும். (அ-2)

# யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதி வாக்களிப்பு விபரம்

| கட்சிகள் | ஊர்காவற்றுறை | | வட்டுக்கோட்டை | | காங்கேசன்துறை | | மானிப்பாய் | | கோப்பாய் | | உடுப்பிட்டி | | பருத்தித்துறை | | சாவகச்சேரி | | நல்லூர் | | யாழ்ப்பாணம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் | வாக்குகள் | வீதம் |
| இ.த.அ.க. (த.தே.கூ) | 8917 | 67.42% | 23442 | 84.52% | 19596 | 81.83% | 28210 | 86.57% | 26467 | 84.26% | 18855 | 87.65% | 17719 | 84.22% | 22922 | 83.61% | 23733 | 88.64% | 16421 | 86.14% |
| ஐ.ம.சு.மு. | 4164 | 31.48% | 3763 | 13.57% | 4048 | 16.90% | 3898 | 11.96% | 4386 | 13.96% | 2424 | 11.27% | 2953 | 14.04% | 4193 | 15.29% | 2651 | 9.90% | 2416 | 12.67% |
| சுயேட்சைக்குழு -07 | 08 | 0.06% | 86 | 0.31% | 62 | 0.26% | 19 | 0.06% | 18 | 0.06% | 01 | 0.00% | 03 | 0.01% | 10 | 0.04% | 18 | 0.07% | 34 | 0.18% |
| சுயேட்சைக்கு 06 | 01 | 0.01% | 27 | 0.10% | 42 | 0.18% | 109 | 0.33% | 88 | 0.28% | 35 | 0.16% | 02 | 0.01% | 07 | 0.03% | 22 | 0.08% | 07 | 0.04% |
| ஐ.ஐ.மு. | 21 | 0.16% | 43 | 0.16% | 41 | 0.17% | 54 | 0.17% | 53 | 0.17% | 27 | 0.13% | 162 | 0.77% | 31 | 0.11% | 62 | 0.23% | 21 | 0.11% |
| ஐ.தே.க. | 17 | 0.13% | 173 | 0.62% | 35 | 0.15% | 88 | 0.27% | 127 | 0.40% | 57 | 0.26% | 26 | 0.12% | 89 | 0.32% | 148 | 0.55% | 60 | 0.31% |
| சுயேட்சைக்குழு 1 | 03 | 0.02% | 19 | 0.07% | 24 | 0.10% | 33 | 0.10% | 80 | 0.25% | 54 | 0.25% | 80 | 0.38% | 25 | 0.09% | 38 | 0.14% | 40 | 0.21% |
| ஐ.சோ.க. | 11 | 0.08% | 18 | 0.06% | 20 | 0.08% | 14 | 0.04% | 34 | 0.11% | 11 | 0.05% | 10 | 0.05% | 27 | 0.10% | 14 | 0.05% | 06 | 0.03% |
| ஸ்ரீ.மகாஜன பக்ஷய | 16 | 0.12% | 38 | 0.14% | 19 | 0.08% | 17 | 0.05% | 71 | 0.23% | 06 | 0.03% | 20 | 0.10% | 61 | 0.22% | 22 | 0.08% | 18 | 0.09% |
| சுயேட்சைக்குழு 3 | 15 | 0.11% | 50 | 0.18% | 17 | 0.07% | 62 | 0.19% | 20 | 0.06% | 09 | 0.04% | 11 | 0.05% | 06 | 0.02% | 10 | 0.04% | 10 | 0.05% |
| சுயேட்சைக்குழு 8 | 08 | 0.06% | 07 | 0.03% | 11 | 0.05% | 07 | 0.02% | 07 | 0.02% | 01 | 0.00% | 03 | 0.01% | 07 | 0.03% | 03 | 0.01% | 04 | 0.02% |
| சுயேட்சைக்குழு 9 | 06 | 0.05% | 08 | 0.03% | 10 | 0.04% | 02 | 0.01% | 10 | 0.03% | 06 | 0.03% | 06 | 0.03% | 03 | 0.01% | 03 | 0.01% | 08 | 0.04% |
| சோ.சமத்துவக் கட்சி | 29 | 0.22% | 26 | 0.09% | 07 | 0.03% | 08 | 0.02% | 07 | 0.02% | 03 | 0.01% | 00 | 0.00% | 04 | 0.01% | 07 | 0.03% | 05 | 0.03% |
| ஜனநாயகக் கட்சி | 01 | 0.01% | 14 | 0.05% | 05 | 0.02% | 35 | 0.11% | 10 | 0.03% | 03 | 0.01% | 07 | 0.03% | 10 | 0.04% | 19 | 0.07% | 04 | 0.02% |
| ம. வி. மு. | 05 | 0.04% | 07 | 0.03% | 04 | 0.02% | 09 | 0.03% | 09 | 0.03% | 01 | 0.00% | 03 | 0.01% | 02 | 0.01% | 10 | 0.04% | 03 | 0.02% |
| ஜனசெத பெரமுன | 02 | 0.02% | 06 | 0.02% | 02 | 0.01% | 03 | 0.01% | 03 | 0.01% | 13 | 0.06% | 23 | 0.11% | 11 | 0.04% | 03 | 0.01% | 02 | 0.01% |
| சுயேட்சைக்குழு 2 | 00 | 0.00% | 05 | 0.02% | 02 | 0.01% | 06 | 0.02% | 05 | 0.02% | 03 | 0.01% | 00 | 0.00% | 00 | 0.00% | 03 | 0.01% | 00 | 0.00% |
| சுயேட்சைக்குழு 4 | 00 | 0.00% | 02 | 0.01% | 01 | 0.00% | 06 | 0.02% | 04 | 0.01% | 02 | 0.01% | 05 | 0.02% | 03 | 0.01% | 02 | 0.01% | 03 | 0.02% |
| சுயேட்சைக்குழு 5 | 02 | 0.02% | 02 | 0.01% | 01 | 0.00% | 04 | 0.01% | 09 | 0.03% | 00 | 0.00% | 02 | 0.01% | 01 | 0.00% | 01 | 0.00% | 01 | 0.01% |
| தொழிலாளர் கட்சி | 01 | 0.01% | 00 | 0.00% | 00 | 0.00% | 01 | 0.00% | 03 | 0.01% | 00 | 0.00% | 03 | 0.01% | 03 | 0.01% | 05 | 0.02% | 00 | 0.00% |
| செல்லுபடியானவை | 13227 | 90.57% | 27736 | 91.67% | 23947 | 92.03% | 32585 | 92.79% | 31411 | 90.77% | 21511 | 92.46% | 21038 | 93.58% | 27415 | 92.02% | 26774 | 94.20% | 19063 | 93.89% |
| நிராகரிக்கப்பட்டவை | 1377 | 9.43% | 2521 | 8.33% | 2074 | 7.97% | 2531 | 7.21% | 3195 | 9.23% | 1755 | 7.54% | 1444 | 6.42% | 2378 | 7.98% | 1650 | 5.80% | 1240 | 6.11% |
| வாக்களிக்கப்பட்டவை | 14604 | 67.77% | 30257 | 66.95% | 26021 | 42.5% | 35116 | 67.89% | 34606 | 64.54% | 23266 | 61.35% | 22482 | 64.14% | 29793 | 60.21% | 28424 | 66.93% | 20303 | 70.96% |
| பதிவு செய்யப்பட்டவை | 21548 | | 45195 | | 61196 | | 51722 | | 53613 | | 37926 | | 35054 | | 49479 | | 42466 | | 28610 | |

# கென்யாவில் மர்ம நபர்கள் வெறியாட்டம்; குழந்தைகள் உட்பட 30 பேர் பலி

(கென்யா)

கென்யாவில் வணிக வளாகம் ஒன்றில் ஆயுதம் தாங்கிய நபர்கள் சிலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 30 பேர் உயிரிழந்தனர். ஆபிரிக்க நாடான கென்யாவின் தலைநகர் நைரோபியிலுள்ள வெஸ்ட்கேட் வணிக வளாகத்துக்குள் நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கிய ஒரு கும்பல் நுழைந்தது. திடீரென்று அக்கும்பல் கண்மூடித்தனமாக மக்களை நோக்கி சுட ஆரம்பித்தது. இதில் அந்த வணிக வளாகத்தில் பொருட்கள் வாங்க வந்திருந்தவர்கள், கடைக்காரர்கள் என 30 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் குழந்தைகளும் அடங்குவர். இத்தாக்குதலால் பீதியடைந்த பலரும் அந்த வளாகத்திலுள்ள கடைகள்மற்றும்உணவகங்களில் இருந்து வீதியை நோக்கி ஓடினர்.

தாக்குதல் குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸாரும் பாதுகாப்புப் படை வீரர்களும் அந்த வளாகத்தைச் சுற்றி வளைத்தனர். அவர்கள் அங்குள்ள ஒவ்வொரு கடைகளுக்கும் சென்று தாக்குதல் நடத்திய மர்ம நபர்களைத் தேடினர்.

ஒரு கடையில் இருந்து 3 உடல்களை கண்டெடுத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். சில கடைகளின் தரைதளங்களில் இரத்தக்கறை படிந்திருந்தன. ஆங்காங்கே தோட்டாக்கள் சிதறிக் கிடந்தன. வளாகத்திலுள்ள சிலரை தாக்குதல்காரர்கள் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பதாக சில உள்ளூர் தொலைக்காட்சிகள் செய்தி வெளியிட்டன. இத்தாக்குதலில் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த சுமார் 10 பேர் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.(அ-2)

# 20 இந்திய மீனவர்கள் கைது

பாக்குநீரிணையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 20 பேரை இலங்கை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

இந்த மீனவர்கள் இந்திய கடற்பரப்பிலா அல்லது சர்வதேச கடல் எல்லையில்லா கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பில் உடனடியாகத் தெரியவரவில்லை என மீன்பிடித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கோபிநாத் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள 20 இந்திய மீனவர்களும் மன்னாரில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார். (அ-2)


மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure,Manicure (கைகள், கால்கள், விரல்கள்,நகங்கள் அழகு படுத்துதல்)
- Nail art
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-09-2013**
**ஞாயிறு காலை 9.00 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 02-10-2013**
**புதன் காலை 9.00 மணி**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**

-இயக்குநர்-



உ
குருவே துணை

வாழ்க் வையகம்



வாழ்க வளமுடன்

இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
வண்ணார்பண்ணை தவமையம் வழங்கும்

## சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

**அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்விற்கு மனவளக்கலை யோகாப் பயிற்சிகள்**

**இலவச அறிமுக உரையும் மனவளக்கலை யோகா பயிற்சியும்**

**காலம்:24.09.2013 (செவ்வாய்க்கிழமை) நேரம்: மாலை 4.30 மணி**
**இடம்: வண்ணை நாச்சிமார் கோவில் திருமண மண்டபம்**

**நிகழ்ச்சி நிரல்**

- இறை வணக்கம் குருவணக்கம்
- வரவேற்புரை தொடக்க உரை - மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி.முருகானந்தவேல் (அறங்காவலர், இலங்கை. மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

அறிமுக உரை- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி எஸ்.இந்திராஅம்மா
பயிற்சி வழங்குபவர் மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி எஸ்.இந்திரா அம்மா அவர்கள்

**தொடர்ந்து வரும் நாட்களில் காயகல்பப் பயிற்சி உடற்பயிற்சி தியானப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்**

காலம் : 25.09.2013 (புதன்கிழமை) தொடக்கம் 29.09.2013 (ஞாயிறுவரை)
நேரம் : மாலை 5 மணி

இவ் அரிய பயிற்சிகளில் கலந்து பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**தொடர்பு: வண்ணார்பண்ணை தவமையம்,**
**இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**
நாச்சிமார் கோயிலடி, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
0777726732, 0771235646, 0714403268, 0777368745

(சி-4695)

குறிப்பு:- அகத்தாய்வு-04 அகத்தாய்வு -03 பயின்ற அன்பர்கள் அனைவரும் பங்கு பற்றவும்
காலம்-28.09.2013 (சனிக்கிழமை) தொடக்கம் 29.09.2013 (ஞாயிற்றுக்கிழமை) வரை
நேரம்:-காலை 9 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை.
இடம்:-வண்ணைதவமையம், 3/8, கேசாவில் முதலாம் ஒழுங்கை (அரசடி ட்ரான்ஸ்போமர் சந்தி அருகாமையில் உள்ள ஒழுங்கை) வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்.

வாழ்க வளமுடன்



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து (KO)<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 64 செவ்: 7ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Bsc, Msc ஆசிரியர்<br>தொ.இ:B2333 | பிறப்பு: 1973 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா :15 செவ்: 12ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G2327 |
| பிறப்பு: 1980 இந்து (sa)<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>கி.பா:85 செவ் 1ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: BA ஆசிரியர்<br>தொ.இ:B2334 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரம் 3ம்<br>கி.பா :116.5 செவ்: 8ல்<br>உயரம்: 153CM<br>தகைமை/தொழில்: Bsc Student<br>தொ.இ:G2332 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 4ம்<br>கி.பா: செவ் 10ல் சூரி,செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L: AIR TICKER OFFICE EXECATIVE<br>தொ.இ:B2335 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4ம்<br>கி.பா :91 செவ் 8ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L தாதிப் பயிற்சி (தனியார்)<br>தொ.இ:G2338 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா :38 செவ்: 12ல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L CIMA (வங்கி உத்தியோகத்தர்)<br>தொ.இ:B2336 | பிறப்பு: 1987 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4ம்<br>கி.பா : 21.25<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA, MA<br>தொ.இ:G2339 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


# தந்தை மற்றும் மகள் மீது ஐவர் கொண்ட குழு தாக்கு

வீட்டில் தங்கியிருந்த தந்தை மற்றும் அவரது மகள் ஆகியோர் இனந் தெரியாதோரின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த 20 ஆம் திகதியன்று இரவு 10 மணியளவில் நடைபெற்றுள்ள இத் தாக்குதல் சம்பவத்தில் 78 வயதான முதியவர் ஒருவரும் 40 வயதான அவரது மகளும் காயங்களுக்குள்ளான நிலையில் குறித்த முதியவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்கிலக்கான குறித்த பெண்ணின் கணவர் வெளிநாடு சென்றுள்ள நிலையில் இவர் மேற்படி தந்தையாரின் வீட்டில் வசித்து வந்ததாகவும் இந்நிலையில் சம்பவதினம் இரவு வேளை இரும்புக்கம்பிகள் சகிதம் வருகைதந்த ஐவர் கொண்ட குழு இவர்கள் தங்கியிருந்த வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்து இருவரையும் தாக்கியுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5-60)



# வடக்கு மாகாண தேர்தல் வெற்றிக்காக ஈழமக்களின் உணர்வுகளை மதியுங்கள்

## பா.ம.க.நிறுவுனர் ராமதாஸ் கோரிக்கை

(சென்னை)

**இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கவிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முதலமைச்ராக பொறுப்பேற்கவிருக்கும் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையில் நடந்துமுடிந்த போரில் ஒன்றரை இலட்சம் அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டனர். நான்கு இலட்சம் தமிழர்களை அகதிகள் என்ற பெயரில் ஆடு மாடுகளைப் போல கொட்டகையில் அடைத்து வைத்து இலங்கை அரசு கொடுமைப்படுத்தியது.

போருக்குப் பின்னரும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தன.வடக்கு மாகாணம் முழுவதும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தான் இருந்தது.

ஜனநாயகத்தில் தமக்கு நம்பிக்கையுள்ளது என்ற மாயத் தோற்றத்தை உலக நாடுகளுக்கு ஏற்படுத்துவதற்காகவும் இந்தத் தேர்தலை இலங்கை அரசு நடத்தியது.

தேர்தல் பிரசாரம் தொடங்கிய நாளில் இருந்தே அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இந்த அடக்கு முறைகளை எல்லாம் தாண்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள் ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியால் வெறும் 8 இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக பதிவான சுமார் 5 இலட்சம் வாக்குகளில் 80 வீதமான வாக்குகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றுள்ளது. இந்தத் தேர்தல் வெற்றிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் அது தமிழீழக் கோரிக்கைக்கு வலு சேர்த்து விடும் என் பதால், அக் கூட்டமைப்பை முறியடிக்க வேண்டும் என இலங்கை அரசு பிரசாரம் செய்தது.

ஆனால், இத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சிக்கு படு தோல்வியை பரிசாக கொடுத்திருக்கின்றனர்.

எனவே, இலங்கை வடக்கு மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், முதலமைச்சர் விக்னேஸ்வரனும் ஈழ மக்கள் உணர்வுகளை மதித்து செயற்பட வேண்டும்.

தேர்தல் முடிவு தமிழீழ கோரிக் கைக்கு கிடைத்த வெற்றி என்பதால், ஈழத் தமிழர்களின் இந்த விருப்பத்தை ஐ.நா.மூலம் நிறைவேற்ற இந்தியாவும் உலக நாடுகளும் முன்வர வேண் டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# புதிய மாகாண சபையினருக்கு இந்து மகாசபை வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

எமது வரலாற்றிலே மகத்தான வெற்றியைப்பெற்று வடபுலத்தின் முதலாவது முதலமைச்சராக பொறுப்பேற்க இருக்கின்ற விக்னேஸ்வரன் ஐயாவுக்கும் குழுவினருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றோம் என இந்து மகாசபை வாழ்த்து தெரிவித்துள்ளது.

அவ்வாழ்த்துச் செய்தியில்,

முக்கியமான தருணத்தில் அடையப்பெற்றிருக்கும் இந்த வெற்றியினை பயன்படுத்தி தமிழ் மக்களினுடைய துன்பதுயரங்களை மாற்றியமைக்கும் வகையில் செவ்வனே செயலாற்றவும் எமது மண்ணின் ஆன்மீக, சமூக, கலாசார, மானிட நல்வாழ் வினை புதிய பரிணாமத்தில் முன்கொண்டு செல்வதற்கும் புதிய மாகாண சபையின் செயற்பாட்டாளர்களுக்கு பூரண இறையருள் கிடைக்க அன்பே சிவமாய் அமர்ந்திருக்கின்ற இறைசிவனை பிரார்த்திக்கிறோம் என அதில் மேலும் தெரிவிக்க[illegible]

# பண்ணிசை பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம், வட இலங்கை சங்கீத சபை மற்றும் அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஆகியவற்றின் பாட விதானங்களுக்கு அமைவாக நடத்தப்படும் இலவச தேவாரப் பண்ணிசை பயிற்சி வகுப்புக்கள் தினசரி சனி,ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகிறது.

இவ் வகுப்புக்கள் பிற்பகல் 3 மணிமுதல் 4.30 மணி வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் 4.30 மணிக்கு யாழ்.சிவ தொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்திலும் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை தினசரி செவ்வாய்க்கிழமைகளில் பிற்பகல் 5 மணிமுதல் 6.30 மணி வரை யாழ். சிவ தொண்டன் நிலைய கொழும்புத்துறை மகளிர் ஆச்சிரமத்திலும் இவ் இலவச பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. இவ் வகுப்புகளில் ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# நூலக போட்டியில் பாடசாலைகள் தெரிவு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட வலய மட்ட பாடசாலை நூலக போட்டியில் வகை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி வகை ஏ.பி.யை சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளும், 1C வகையைச் சேர்ந்த உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமாரி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளும் வகை 2ஐ சேர்ந்த கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், கைதடி அ.த.க. பாடசாலை ஆகியவையும் வகை 3 ஐ சேர்ந்த சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (அ-5-29)




வடமாகாண அரச திணைக்களங்களில் புதிதாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான விளக்கமளிக்கும் கூட்டம் அண்மையில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற போது... (படங்கள்:- என்.குமார்)

# வரலாறு காணாத தேர்தல் முடிவு தனி அரசுக்கான அங்கீகாரம்




எதிர்பார்ப்புக்களையும் கடந்து வடக்கு மாகாண சபைத்தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மகத்தான வெற்றியைக் கொடுத்துள்ளது.

வடக்கு மாகாண சபை



யின் ஆட்சியை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றும் என்பது தெரிந்த விடயமாயினும் தமிழ்மக்கள் என்றுமில் லாதவாறு திரண்டெழுந்து வாக்களித்து வரலாற்றுச் சாதனை படைப்பர் என் பது எவராலும் எதிர்பார்க் கப்படாத ஒரு பெரும் நிதர்சனம்.

வடக்கு மாகாணத்தில் அதிகூடிய வாக்களிப்பு என்ற தகவலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வரலாறு காணாத வெற்றி என்ற உண்மையையும் தனித்து தேர்தல் வெற்றி என்ற விமர்சனங்களுக் குள் அடக்கி விடமுடியாது.

மாறாக என்றுமில்லாத வாறு தமிழ் மக்கள் உணர் வுபூர்வமாக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பிற்கு வாக்களித்ததன்மூலம் இலங்கை அரசுக்கும் சர் வதேச சமூகத்திற்கும் முக் கியமான செய்திகளை தமிழ்மக்கள் கூறியுள்ள னர்.

இதில் இலங்கை அர சுக்கு தமிழ்மக்கள் கூறுவ தானது, தமிழ்மக்கள் தங்க ளைத் தாங்களே ஆட்சி செய்ய விரும்புகின்றனர்.

காலாகாலமாக நீங்கள் எங்களுக்குச் செய்த வன் கொடுமைகளை நாங்கள் ஒரு போதும் மறந்துவிட வில்லை.

2009 ஆம் ஆண்டு வன் னிப் போரில் தமிழ்மக்க ளைக் கொன்றொழித்த நீங்கள் வீதிகளைப் புனர மைக்கலாம், வீடுகளைக் கட்டலாம், அபிவிருத்தி என்று உரைக்கலாம். ஆனால் உங்களோடு சேர்ந்து வாழ்வதென்பது கூச்சமானது.

நீங்கள்; எங்கள் இனத் தைக் கருவறுத்த கொடு மையை நாம் எக்காலத் திலும் மன்னிக்கவும் மறக் கவும் மாட்டோம் என்ற செய்தி தெளிவாகக் கூறப் பட்டுள்ளது.

அதேநேரம் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மிக உச்சமாக தமிழ்த் தேசி யக்கூட்டமைப்புக்கு வாக் களித்ததன் மூலம் நாங்கள் இறைமையுள்ள தமிழ்த் தேசியமாக வாழவிரும்பு கிறோம்.

வன்னிப்போரில் இல ங்கை அரசுக்கு ஆயுத உதவி கொடுத்து விடுத லைப் புலிகளை நீங்கள் தோற் கடித்திருக்கலாம். ஆனால் நாங்கள் தனித்துவமாக வாழ விரும்புகிறோம். அதுவே எங்கள் அபி லாசை. தனியரசு என்பது விடுதலைப்புலிகளின் கோரிக்கை மட்டுமல்ல அது எங்களின் கோரிக்கை யும் கூட. இப்போது புலிகள் இல்லாது போனாலும் எங் கள் மனங்களில் அந்த நினைப் பும் தேவையும் தீர்க்கமாக நிலைத்துவிட்டன.

நீங்கள் எங்களுக் குச் செய்யவேண்டியது எங்களுக்கான ஆட்சியை எங்களுக்கு ஏற்படுத்தித்

## இலங்கை அரசும் சர்வதேசமும் இதைப்புரிவது அவசியம்

தரவேண்டும் என்பது தான்.

இந்த உண்மைகளை அரசும் சர்வதேசமும்



புரிந்து கொண்டால்- புரி தலுக்கு அமைவாகச் செயற் பட்டால் இலங்கைத் திரு நாட்டின் எதிர்காலம் அமை தியானதாக, ஆரோக்கிய மானதாக இருக்கும்.

விடுதலைக்காக 30 ஆண்டுகள் ஆயுதப்போரா ட்டத்தை நடத்திய, இதற்காக எத்தனையோ இழப்புக்களை சந்தித்த தமிழ் மக்கள், வடக்கு மாகாண சபைத் தேர்த லில் திரண்டெழுந்து வாக் களித்தமை அதிசயமில் லையாயினும் வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவப் பிரசன்னம், சட்டவிரோத மீள் குடியே ற்றம், திட்டமிட்ட கழுத்த றுப்பு என்ற பல்வகை நெருக்கீடுகள், ஆபத்துக் கள் மத்தியில் தமிழ்மக் கள் தங்கள் விடு தலைக் காக- உரிமைக்காக வாக்க ளித்தனர் என்றால் அது குறித்து சிங்கள மக் களும் ஆட்சியாளர்களும் ஆச்சரியம் அடையாமல் இருக்க முடியாது.

எதுவாயினும் வடக்கு மாகாண சபைத் தேர்த லின் முடிபுகள் தமிழ் மக்களின் உரிமை களை வழங்க வேண்டும் என் பதை மீண்டும் ஒரு தடவை அரசுக்கும் சர்வதேசத் துக்கும் அழுத்தம் திருத் தமாக எடுத்தியம்பியுள் ளது.

விதுரன்

# கூட்டமைப்பு வெற்றியடைந்ததால் அரசு புதிய சட்டங்களை இயற்றும்

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி

இலங்கையில் வடக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அமோக வெற்றி பெற்றமை வரவேற்கத்தக்கது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது,

இலங்கையில் வடக்கு மாகாண த்தில் ஈழத் தமிழர்கள் வாழும் பகு தியில் நேற்றுமுன்தினம் நடைபெ ற்ற தேர்தல் முடிவுகள் வெளியாகி யுள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் 28 இடங்களில் வெற்றி பெற்றுள் ளமை வரவேற்க வேண்டிய செய்தி யாகும்.

அத்துடன் யாழ்ப்பாணம் மாவட் டத்தில் மொத்தம் 16 இடங்களில் 14 இடங்களை இவர்கள் கைப்பற்றி யுள்ளனர்.

இலங்கை அரசின் அடக்கு முறை, ஒடுக்கு முறை, அச்சுறுத்தல் களையெல்லாம் தாண்டி, ஈழத் தமிழர்கள் தங்களது உணர்வை இத் தேர்தல் மூலம் பதிவு செய் துள்ளனர்.

முன்பு, ஈழத் தந்தை செல்வநாய கம் அவர்கள் தலைமையில் பெற்ற வெற்றிகளின் விளைவுகளிலி ருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பல புதிய சட்ட ஏவுகணைகளை ஏவி விட்டது போன்று இந்த வெற்றிகளையும் அலட்சியப்படுத்த இலங்கை அரசு முயற்சிக்கக் கூடும்.

எனவே, உலகத் தமிழர் உரிமைக் காவலர்களாகிய நாம் இது விடயத்தில் கூர்மையான கவ னத்தைச் செலுத்துவோம்! என்று ள்ளது. (அ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந் துள்ள குருநகர்-II பொதுச் சுகாதாரப் பரி சோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங் கும் திட்டம் குறிப்பிட்ட இடங்களில் நடைபெற வுள்ளது.

இன்று திங் கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு புனித யுவா னியார் ஆலயத்திலும் 11 மணிக்கு சந்தன மாதா கோவில் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோவில் வீதியிலும் 11 மணிக்கு சுண்டுக்குளி பாடசாலை சந்தியிலும் 26 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு சுவாட்ஸ் லேன் பகுதியிலும் மேற்படி திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு நடமாடும் சேவையும் நடைபெறவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. (அ-5)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2013-17.10.2013



## சிம்மம்

மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்

**சூரியனை இராசிநாதனாகக்கொண்ட சிம்ம இராசி நேயர்களே! எதிரிகளை எடைபோட முடியாத நேரம்!**

### எதிரிகளை எடைபோட முடியாத நேரம்!

புரட்டாதி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இராசிநாதன் சூரியன் தனாதிபதி புதனுடன் கூடி தனஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். தொழில் வளர்ச்சிக்கு தொகை எதிர்பார்த்தபடி கிடைக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும்.

என்னயிருந்தாலும் இம்மாதம் உச்சம் பெற்று விளங்கும் எதிரிகளின் ஸ்தானத்திற்கு அதிபதியான சனியை, சுகஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் பார்ப்பது அவ்வளவு நல்லதல்ல. பல காரியங்களில் தடைகளும் தாமதங்களும் வந்து அலைமோதும். தாய் ஸ்தானத்திற்கும் தந்தை ஸ்தானத்திற்கும் அதிபதியான செவ்வாய் நீச்சம் பெற்று எதிரிகளின் ஸ்தனாதிபதியான சனியை பார்ப்பதால் பெற்றோர்கள் கூட பகையாக மாறலாம்.

உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் வந்து அலைமோதும். தசாபுத்தி பலம் பெற்றிருந்தால் சாதாரண சிகிச்சையிலேயே பலன் பெறலாம். உடன்பிறப்புக்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

மேலும் இராகு, கேதுக்களின் ஆதிக்கத்தைப் பொறுத்தவரை 3,9 ஆகிய இடங்களில் பாம்பு கிரகங்கள் அமர்ந்திருப்பதால் சர்ப்ப சாந்தி செய்வது நல்லது. சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம். வருமானம் வந்து மறுநிமிடமே செலவாகலாம். இழப்புக்களில் இருந்து விடுபட என்ன வழியென்று யோசிப்பீர்கள். கூடுதலாக சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்படுவீர்கள்.

குருவின் சஞ்சாரம் ஒன்று மட்டும் தான் சிறப்பாக இருக்கிறது. அதன் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிவதால் மாதக் கடைசியில் உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கல்யாண வாய்ப்புகளும் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

உங்கள் இராசிக்கு 2,11 க்கு அதிபதியான புதன் செப்டெம்பர் 22 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாகத் தேங்கியிருந்த காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிக்க திறமை மிக்கவர்கள் பின்னணியாக இருப்பர். வங்கிச் சேமிப்பு உயரும். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்குவதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். தடைகள் அகல, விஷ்ணு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

விருச்சிக இராசியில் அக்டோபர் 3 ஆம் திகதியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். 3,10 க்கு அதிபதியான சுக்ரன் 4 இல் சஞ்சரிக்கும்பொழுது தடைப்பட்ட ஒப்பந்தங்கள் தானாகவே வந்து சேரும். கடை திறப்பு விழாக்களும் கட்டடத்திறப்பு விழாக்களும் ஒருசிலர் செய்ய முன் வருவர். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

**சிம்ம செவ்வாயின் சஞ்சாரம்!**

சிம்ம இராசியில் செவ்வாய் அக்டோபர் 8 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்கு யோகம் தரும் கிரகமான செவ்வாய் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் இந்தநேரம் நல்ல வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரும். நாட்டுப்பற்று மிக்கவர்களுக்கு புதிய பதவிகளும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு விரும்பிய தொழிலை செய்ய முன்வருவர். பூமி லாபம் உண்டு. பெற்றோர்களின் பிரியம் கூடும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிக்கு தந்தை வழி ஒத்துழைப்பு கிடைக்கும். பொதுவாக வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் நேரமிது.

இம்மாதம் பெருமாளை வழிபட்டு பெருமை காண வேண்டிய மாதமாகும்.

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

**புதனை இராசிநாதனாகக் கொண்ட கன்னி இராசிநேயர்களே! நினைத்தது நிறைவேறும் நேரம்!**

### நினைத்தது நிறைவேறும் நேரம்!

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் புதன் உச்சம் பெற்றிருக்கும்பொழுது தனாதிபதி சுக்ரனும் தனஸ்தானத்திலேயே சஞ்சரிக்கிறார். எனவே, இம்மாதம் ஒரு இனிமையான மாதமாகவே உங்களுக்கு அமையும். எடுத்த காரியங்களுக்கு என்ன செலவு ஏற்படுகிறதோ அதற்குரிய தொகை முன்னதாகவே கிடைக்கும். கொள்கையை விட்டு கொடுக்காமல் செயற்படும் நீங்கள் ஏழரைச்சனியின் ஆதிக்கம் இருக்கும் இந்த நேரத்தில் ஒருசில சமயங்களில் கொள்கைப்பிடிப்பைத் தளர்த்திக் கொள்ளத்தான் வேண்டும்.

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் 12 க்கு அதிபதியோடு கூடியிருக்கிறார். எனவே, பயணங்கள் அதிகரிக்கும். தூரதேசத்தில் இருந்து அழைப்புகளும் வரலாம். உத்தியோகம் சம்பந்தமாக வெளி நாட்டு முயற்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள் விரைவில் வெளி நாடு செல்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. குடும்ப ஸ்தானத்தில் சுக்ரனும் இராகுவும் இணைந்திருப்பதால் குழப்பங்கள் அதிகரிக்கும். அதேநேரத்தில் குருவின் பார்வை அதன் மீது பதிவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்.

மங்கல நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். உச்ச சனியின் ஆதிக்கம் உத்தியோகம், தொழிலில் உங்களுக்கு முன்னேற்றத்தை வழங்கும். சனியின் ஆதிக்கம் இருக்கும் வரை சஞ்சலங்கள் இருந்து கொண்டுதான் இருக்கும். இருப்பினும் தன்னம்பிக்கையும் துணிவும்தான் தற்கால வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். எண்ணங்களை ஈடேற வழி செய்வது இறைவழிபாடு என்பதால்தான் இம்மாதம் இனிய மாதமாக அமைய உங்கள் திசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளையும் செய்யலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

இராசிநாதன் புதன் செப்ரெம்பர் 22 ஆம் திகதி தனஸ்தானத்தில் சஞ்சரித்து 20 ஆம் இடத்திலுள்ள குருவால் பார்க்கப்படுகிறார். எனவே, பணவரவு திருப்திகரமாக இருக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் முயற்சிக்கு கைகொடுத்து உதவுவர். குடும்பசுமை குறையும். உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பால் கூடுதல் வருமானங்கள் கிடைக்கலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கி சங்கிலித்தொடர்போல் வாழ்க்கை நடத்தி வந்த உங்களுக்கு இந்த மாதத்தில் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**சுகம் தரும் சுக்ரப்பெயர்ச்சி!**

அக்டோபர் 3 ஆம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன்விளைவாக சில நல்ல மாற்றங்களும் உங்களுக்கு வந்துசேரப் போகின்றது. 2,9 க்கு அதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பெற்றோர் வழியிலும் உற்றார், உறவினர்கள் வழியிலும் இருந்த பிரச்சினைகள் அகலும். பூர்வீக இடம் சம்பந்தமாக நடந்த பஞ்சாயத்துக்கள் நீண்ட நாட்களாக முடியவில்லையே என்ற கவலை மாறும். விரும்பும் விதத்தில் பாகப் பிரிவினைகள் அமையும்.

**சிம்மச் செவ்வாயின் ஆதிக்கம்!**

அக்டோபர் 8 ஆம் திகதி சிம்ம இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 12 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜ யோக அடிப்படையில் சில நல்ல வாய்ப்புக்கள் நாடி வந்து சேரப் போகிறது. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் எண்ணம் மேலோங்கியிருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உத்தியோக மாற்றம், இடமாற்றம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். இம்மாதம் வாலில் மணிகட்டிய ஆஞ்சநேயரை வழிபட்டு வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ளுங்கள்.

(தொடரும்)

# சாமியாராகவும் இல்லை, சம்சாரியாகவும் இல்லை!




ஆன்மீகம் 122

என் வாழ்க்கைத் துணையாக அமைந்திருக்கும் அம்மையார் பெயர் ரோகிணி. கல்வித்துறையைச் சார்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தந்தையின் மூத்த மனைவி, அதாவது ரோகிணியின் பெரியம்மா ஆரம்பகாலம் முதல் புத்ர சோகத்தில் மனம் தத்தளித்து வியாதியால் உடல்நலம் குன்றியிருந்தார் இவர். ரோகிணி 1990 இல் தன் பெரியம்மாவுடன் தலையாட்டிச் சித்தர்பெருமான் ஆச்சிரமத்தில் புரட்டாசி மாதம் 51 நாட்கள் நடைபெறும் கோ பூஜையில் கலந்து கொண்டு அருளாசி பெற்றார்.

என் சஞ்சீவி தைலமும் பல்பொடியும் அவருக்கு அருமருந்தாக அமைந்தது. என் வைத்தியத்தின் பலனாக பூரண குணம் அடைந்து மன நிம்மதி பெற்றார். பல மகான்கள், சித்தர்கள் சாதுக்களைச் சந்தித்து ஆசிகள் பெற்றார். தன் கர்ம வினைகள் தீர தரும காரியங்கள் செய்து தீவிரமாக தெய்வீக திருப்பணி செய்தார். நோய்களும் தீர்ந்து ஏழுபடி ஏற முடியாதவர் ஏழுமலையில் சதுரகிரிமலை ஏறி சாதனை படைத்தார்.

அவர் பெரியம்மா தன் சொந்த தங்கையையே தன் கணவருக்கு இரண்டாம் தாரமாய் புத்திர பாக்கியத்திற்காக திருமணம் செய்து வைத்த தாயுள்ளம் கொண்டவர். அவர் தங்கையின் மூத்த மகள்தான் ரோகிணி என்ற நட்சத்திர பெயர் கொண்ட பி.ஏ ஆங்கில இலக்கியம் பயின்ற கல்லூரி மாணவி. அந்த மங்கையை நான் சந்தித்தபோது அவர் பள்ளி நிர்வாகத்தில் தன் பெரியம்மாவிற்கு உதவியாக இருந்து கொண்டு வீணை வாசிக்க கற்றுக் கொண்டு கல்லூரி படிப்பும் பள்ளி வளர்ச்சியாலும் வீரமங்கையாய் ஒளி வீசினார்.



ஸ்ரீல ஸ்ரீ தலையாட்டிச் சித்தருடன் காகபுஜண்டர் நாடி ரமணி குருஜி

அவருக்கு ஆன்மீகத்தில், சேவையில், ஆர்வமும் ஆராய்ச்சியும் இருந்தது. இருப்பினும் பள்ளிக்கூடம், சமூகம் என்ற அமைப்பில் இருக்கும் பெண்தானே என்று நினைத்தேன். சாதாரண ஆசாபாசங்களைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும் பெண்தானே என்று நினைத்தேன். அவரது தாய்க்கு வைத்திய உதவி செய்த நான் மற்றவர் கண்களுக்கு ஏதோ சாமியார் சொத்தை சொந்தமாக்கி கொள்வான் என்ற உலக அற்ப ஆசைகளை வளர்த்துக் கொண்டு என்னை சந்தேகித்தார்கள், சில குள்ளநரிக் கூட்டங்கள்.

பிறகு எத்தனையோ சோதனைகளுக்குப் பிறகு அவளை மணந்தேன். அவர்கள் குடும்ப பிரச்சினையோ எங்களுக்கு திருமண உறவாக அமைந்தது. கலியுக அவதார பராசக்தி சாது கிருஸ்ணவேணி அம்மா அவர்களது ஆசியாலும் ரோகிணி அம்மையாரின் பெரியம்மா, மற்றும் என் தந்தை காலம் சென்ற பொலிஸ் டி.எஸ்.பியாக இருந்து ஓய்வுபெற்ற சுப்பிரமணியம் அவர்களது முன்னிலையில் எங்களுக்கு திருநெல்வேலி, பாபநாசத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரத்தில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. பிறகு முப்பெரும் தேவியாரும் சக்தி ரூபங்களின் ஒரே வடிவாக விளங்கும் கொல்லூர் தேவி, நவகோடி துர்க்கா பரமேஸ்வரி அம்சமான தாய் மூகாம்பிகை திருக்கோயில் எங்களுக்கு திருமணம், கஜபூஜை, கோபூஜை, சித்தர்கள் யாகம், சாதுக்களுக்கு அன்னதானம், வஸ்திரதானத்துடன் இனிதே நடைபெற்றது.

(தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# “இந்திய நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸை வீழ்த்துவதே எனது இலட்சியம்” வைகோ



பேரறிஞர் அண்ணாதுரையின் 105-வது பிறந்தநாளை திராவிடக் கட்சிகள் அனைத்தும் தடபுடலாகக் கொண்டாடியிருக்கின்றன. தமிழக முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில்கொண்டாடப்பட்ட விழாவில், நாற்பதுக்கு நாற்பது தொகுதிகளை நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயிக்க தொண்டர்கள பாடுபட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். எதிர்க்கட்சி வரிசையிலிருக்கும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் அதன் தலைவர் கலைஞர் கருணாநிதி, அ.தி.மு.க அரசுக்கு எதிராக மக்கள் கருத்தினை உருவாக்கும் முயற்சியில் தன் தொண்டர்களை உசுப்பிவிட்டுள்ளார். அண்ணா சிலைக்கு மாலை அணிவித்த அவர் வேலூரில் நடைபெறுவதாக இருந்த தி.மு.க.வின் முப்பெரும் விழாவினை சென்னைக்கு மாற்றியிருக்கிறார். இந்த இரு கட்சிகளையும் தவிர்த்து நாம்தான் அண்ணாவின் பிறந்த நாளைக் கொண்டாட முழுத் தகுதியானவர்கள் என்று அறிவித்து, தமிழகத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள விருதுநகரில் அண்ணா பிறந்த நாள் மாநாட்டை நடத்திமுடித்திருக்கிறார் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ.

இம்மூவரின் அண்ணா பிறந்த நாள் கொண்டாட்டத்தில் வைகோவின் அறிவிப்புத்தான் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்துள்ளது. 1993 இல் தொடங்கப்பட்ட கட்சிக்கு இப்போது வயது 20. இந்த இருபது வருட காலத்தில் அக்கட்சியின் தேர்தலில் வெற்றி என்பது உச்சாணிக் கொம்பிற்குப் போய் திரும்பியுள்ளது. சுமார் 6 சதவீதம் வரை வாக்காளர்கள் உள்ள கட்சியாக திகழ்ந்த ம.தி.மு.க. மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் தொடர் வெற்றி பெற்றது. 1998, 1999, 2004 ஆகிய மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களில் இக்கட்சி பெற்ற வெற்றியால் ம.தி.மு.கவிற்கு டெல்லி நாடாளுமன்றத்தில் மதிப்பும் மரியாதையும் இருந்தது. அங்கு பிரதமராக இருந்த அதல் பிஹாரி வாஜ்பாயிடம் வைகோவிற்கு தனி மதிப்பே இருந்தது. எந்த நேரத்திலும் அவரது வீட்டுக் கதவைத் தட்டி தமிழக பிரச்சினைகள் பற்றிப் பேச முடியும் என்ற அந்தஸ்து வைகோவிற்கு இருந்தது. ஆனால், 19 மாதகால பொடா சிறைவாசத்திற்குப் பிறகு வந்த 2004 நாடாளுமன்ற தேர்தலில் வைகோ போட்டியிடாதது ஒரு வரலாற்றுப் பிழையாக அமைந்து விட்டது என்று ம.தி.மு.க சீனியர்களும் மனம்நொந்து பேசினார்கள். அதன் பிறகு 2009 நாடாளுமன்றத் தேர்தல், 2006 மற்றும் 2011 சட்டமன்றத் தேர்தல் எல்லாமே ம.தி.மு.கவிற்கு சவாலாக அமைந்துவிட்டது.

ஆனாலும் ஒரு சட்டமன்றத் தேர்தலிலேயே போட்டியிடாமல் இருந்த ம.தி.மு.கவின் அரசியல் எதிர்காலம் இனி அம்பேல்தான் என்று அனைத்து அரசியல் தலைவர்களுமே ஆரூடம் கணித்தார்கள். அதை முறியடித்தது, மாநிலம் முழுவதும் பல்வேறு பொதுப்பிரச்சினைகளை முன்னிறுத்தி வைகோ மேற்கொண்ட பாதயாத்திரைகள்தான். அதில் முக்கியமானது மதுவிலக்கை அமல்படுத்தக் கோரி மாநிலம் முழுவதும் வைகோ நடத்திய பாதயாத்திரை. இலங்கை தமிழர்கள் விடயத்தில் மத்திய அரசு போதிய நடவடிக்கை எடுப்பதில்லை என்ற கோபம் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் மீது படர்ந்திருந்த நேரத்தில் வைகோவின் பிரசாரம் தமிழக மக்கள் மனதில் குடிகொண்டது. அதுவும் இலங்கையில் நடந்து முடிந்த போருக்குப் பிறகு தமிழகத்தில் வெடித்துக் கிளம்பிய மாணவர்கள் போராட்டம் வைகோவின் இடைவிடாத பிரச்சாரத்தின் அடையாளம் என்றால் மிகையாகாது. அந்த அளவிற்கு மாணவர்கள் படிக்கும் கல்லூரி வாசல்களிலும், ஹாஸ்டல் வாசல்களிலும் ம.தி.மு.க வினரை நிற்க வைத்து இலங்கைத் தமிழர்கள படும் தொல்லைகள் அடங்கிய சீ.டி.க்கள் போர் முனையில் கொல்லப் பட்ட தமிழர்களின் கோரக் காட்சிகள் அடங்கிய சீ.டி.க்கள் போன்றவற்றை விநியோகித்தார். இதனால் கூட வைகோ இளைஞர்கள் மனதில் இடம்பிடித்தார்.

இதுபோன்ற காலகட்டத்தில்தான் பாதயாத்திரை மேற்கொண்டிருந்த வைகோவை அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா திடீரென்று சந்தித்தார். அந்த சந்திப்பு அ.தி.மு.க-ம.தி.மு.க கூட்டணி மீண்டும் உருவாகும் என்ற வியூகத்திற்கு உரம்போட்டது. வைகோவும் அந்த இமேஜை அப்படியே நகர்த்திச் செல்லவே விரும்பினார். இந்த பாதயாத்திரை சந்திப்பிற்குப் பிறகு வைகோவின் அறிக்கைகள் எல்லாமே பல விடயங்களில் முதல்வர் ஜெயலலிதாவின் முடிவுகளைப் பாராட்டும் வகையிலேயே அமைந்திருந்தது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் தமிழீழம் அமைய தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டபோது வரலாறு பொன்மகுடம் சூட்டும் என்று பாராட்டி அறிக்கையை விட்டார் வைகோ. ஆனால், நாற்பதுக்கு நாற்பது தொகுதிகளிலும் போட்டி. அ.தி.மு. தனித்துப் போட்டி என்றெல்லாம் அ.தி.மு.க ததலைமை செய்த அறிவிப்புக்கள், பிரகடனங்கள் வைகோவை வியக்க வைத்தது. அ.தி.மு.க நாடாளுமன்றத் தேர்தலை கூட்டணியுடன் சந்திக்கப் போகிறதா அல்லது உள்ளாட்சித் தேர்தல்போல் தனியாக சந்திக்கப்போகிறதா என்ற கேள்வி வைகோ போன்றவர்களின் மனதினைப் போட்டு குழப்பியிருந்தால் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை.

-எம்.காசிநாதன்-


(தொடரும்)

# தமிழன் அடக்கு முறைக்கு அடிபணியான்!

## தொல். திருமாவளவன் வாழ்த்து

**(சென்னை)**

**இலங்கையில் நடைபெற்ற வடக்கு மாகாணத்துக்கான தேர்தலில் எண்பது வீத வாக்குகளைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. 36 ஆசனங்களில் 30 ஆசனங்களை வென்றிருக்கிறது.**



வடக்கு மாகாணத்தில் ஆட்சிய மைக்கவிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு முதல்வராகப் பொறுப்பேற்கவிருக்கும் முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் சர்வதேச நிர்ப்பந்தங்களின் காரணமாகவே நடத்தப்பட்டது. தேர்தலை அறிவித்தாலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதைத் தடுக்கும் விதமாக பல்வேறு இடையூறுகளை இலங்கை அரசு செய்து வந்தது. த.தே.கூ. வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக் கூடாது என மிரட்டல் விடுத்து சுவரொட்டிகளை இராணுவமே ஒட்டியது. த.தே.கூ. வேட்பாளர்கள் சிலர் தாக்கப்பட்டனர். குறிப்பாக அனந்தி எழிலனைக் கொலை செய்யும் நோக்கோடு கொலை வெறித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

அவரது வீடு அடித்து நெறுக்கப்பட்டதோடு அங்கிருந்த ஒன்பது பேர் பலத்த காயமடைந்தனர். தேர்தல் பார்வையாளர்களும் தாக்குதலுக்கு ஆளாகினர்.

வடக்கு மாகாணத்தில் தமிழர்கள் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு அனுமதித்திருந்தால் வாக்குப் பதிவு 90 வீதத்தைத் தொட்டிருக்கும்.

ஆனாலும் தமிழ் மக்கள் தமது கருத்து என்ன என்பதை மிகத் தெளிவாக தெரிவித்து விட்டனர். இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கு பணிய மாட்டோம் என துணிச்சலோடு அறிவித்து விட்டனர். அதிகாரப் பகிர்வுக்கான அவர்களது வீரம் செறிந்த போராட்டத்தில் இதுவொரு முக்கியமான நிகழ்வாகும்.

சுதந்திரமாக தேர்தலை நடத்தி விட்டோம் என சர்வதேசத்தை நம்ப வைத்து தம் மீதான அழுத்தத்திலிருந்து தப்பித்துக் கொள்ள இலங்கை அரசு முயற்சிக்கும்.

அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுமதிக்கக்கூடாது. தமிழ் மக்கள் தமக்களித்திருக்கும் இந்த மகத்தான ஆதரவைப் பயன்படுத்தி இலங்கை அரசின் மீதான சர்வதேச நெருக்குதல்களை அது அதிகரிக்கச் செய்ய வேண்டும். நாளை மறு தினம் நவநீதம்பிள்ளை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்து வாய்மொழி அறிக்கை தாக்கல்செய்யவுள்ளநிலையில் த.தே.கூ. வின் பணி அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக வுள்ளது.

ஈழத் தமிழர்கள் அனைவரும் ஒன்று பட்டு நிற்கிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் மூலம் அவர்கள் வெளிப்படுத்திவிட்டனர். அந்த ஒற்றுமையை முன்னோக்கி எடுத்துச் செல்வது த.தே.கூ.வின் முன்னாலுள்ள சவால் ஆகும். குறிப்பாக வடக்கு -கிழக்கு மாகாண மக்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தியாகவேண்டும். அதற்கு த.தே.கூ. முன்முயற்சி எடுக்க வேண்டும். முஸ்லிம் அமைப்புகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார். (அ-2)






இந்திய வெளிவிவகார அமைச்சின் துணைத் தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த இந்தி,வயலின், யோகா ஆகிய வகுப்புக்களை நிறைவு செய்து 12 மாணவர்கள் அண்மையில் வெளியேறிய போது...

# இலங்கை மீது சைபர் தாக்குதல் நடத்தப்படக் கூடிய சாத்தியம்

இலங்கையின் மீது சைபர் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இணையத்தின் ஊடாக தகவல்களை கண்காணித்தல், உளவு பார்த்தல் போன்ற நடவடிக்கைகளை கட்டுப்படுத்த போதிளவு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அரசாங்க நிறுவனங்கள் முக்கிய ஸ்தாபனங்களின் இணைய தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் இரகசிய ஆவணங்களை இலகுவில் பார்வையிடக் கூடிய வகையிலான சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு, நிதித்துறை, வெளிவிவகாரம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகள் சார் தகவல்களை உளவு பார்க்கப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தனிப்பட்ட நபர்களின் இணையத்தளங்கள், மின்னஞ்சல்கள், சமூகவலைப்பக்கங்கள் போன்றவற்றிற்குள் ஊடுருவி தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவினர் அண்மையில் அந்நாட்டு மக்களின் தகவல்களை இரகசியமாக உளவு பார்த்த விவகாரம், முன்னாள் சீ.ஐ.ஏ. அதிகாரி எட்வர்ட் ஸ்னோவ்டனின் ஊடாக வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டு பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தகவல்களை உளவு பார்ப்பதற்கான அதிகளவு வாய்ப்புக்கள் இலங்கையில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் சுமுகமான உறவுகளை பேணாத நாடுகள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.(அ-2)

# இராஜதந்திர உறவுகளை பேணுவதில் நிதானத்தை பின்பற்ற வேண்டும்

## அரசுக்கு ஐ.தே.க. அட்வைஸ்

அரசாங்கம் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதில் நிதானத்தைப் பின்பற்ற வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள டி.எஸ்.சேனநாயக்க சிலையை அகற்றுமாறும், பௌத்த கொடியை அகற்றுமாறும் கோரியதாக, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

எனினும், இதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய கருத்துக்களை ஆளும் கட்சியினர் வெளியிடுவதும் அதனை ஆளும் கட்சியினரே மீளவும் மறுப்பதும் தற்போது அரசாங்கத்திற்கு வாடிக்கையாகி விட்டது.

முக்கிய பொறுப்புக்களை வகிப்பவர்கள் நாட்டின் நன்மதிப்பை பாதுகாக்கக் கூடிய வகையில் கருத்துக்களை வெளியிட வேண்டும். அரசாங்கம் இராஜந்திர விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தத் தவறியுள்ளமையை பாதுகாப்பு செயலாளரின் இக் கூற்று சுட்டிக் காட்டுகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நாடுகளிடம் இலங்கையின் நன்மதிப்பு வீழ்ச்சியடைவதற்கு அரசாங்கமே பொறுப்பு.

வெளிநாட்டு இராஜதந்திரிகளை அவமரியாதை செய்வது ஆரோக்கியமான நடவடிக்கையாக கருதப்பட முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பொறுப்பில்லாதோர் மீது கடும் நடவடிக்கை

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வீரியமான போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ளாது ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றாதவர்கள் மீது கடும் நடவடிக்கையை தேர்தல் முடிவடைந்ததும் கட்சி முன்னெடுக்கும். அத்துடன் அதன் மூலம் கட்சிபுடம் போடப்படும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம் அஷ்ரஃப் நினைவு தின நிகழ்வு புத்தளம் நுஹ்மான் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு விசேட உரை நிகழ்த்திய போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

மறைந்த நமது தலைவர் வாழ்ந்த யுகத்துக்கும் இன்று நாங்கள் முகங்கொடுக்கின்ற இந்த வித்தியாசமான யுகத்துக்கும் இடையிலான வித்தியாசமான மாற்றங்களைத்திரும்பிப் பார்த்தால், எவ்வாறு இக்கால இடைவெளியில்ஏற்பட்டுள்ள சவால்களுக்கு ஏற்ற வகையில் எங்களை நாம் நெறிப்படுத்திக் கொள்ளலாம் எனச் சிந்திப்பது சிறப்பாக இருக்கும்.

என்னைப் பொறுத்தவரை இன்று நாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு எங்களது உறுதியான கொள்கைப் பிடிப்புத்தான் காரணம். இக்கொள்கைப் பிடிப்பே"எங்களை மற்றவர்கள் எதிரிகளாகப் பார்க்க வைக்கின்றது. எங்களது அடிப் படை சித்தாந்தங்களில் நாங்கள் சரணாகதி அரசியலில்செல்வதற்குதயாரில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டில் இருப்பது பலருக்கும் ஜீரணிக்க முடியாதுள்ளது.

அன்று அவர் அனுபவித்த சோதனைகளையும் வேதனைகளையும் இன்னும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அவற்றில் எந்த ஒரு வேறுபாடும் கிடையாது என்றாலும் அவரிடம் காணப்பட்ட விடயங்களை ஒன்றிணைக்கின்ற தீவிரப் போக்கு எங்களிடம் ஓரளவு குன்றிப் போயுள்ளதாக அடையாளம் காண்கின்றோம் என்றார். (அ-2)

# வடமேற்கில் அதிக விருப்பு வாக்குகள் தயாசிறிக்கு

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் அதிகளவான விருப்பு வாக்குகளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பெற்றுள்ளார்.

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் களத்தைப் போன்று அதிகளவில் பேசப்பட்ட மற்றுமொரு மாகாணம் வடமேல் மாகாணமாகும்.

குறித்த மாகாண சபைக்கு போட்டியிட்ட ஆளும் கட்சியை சேர்ந்த தயாசிறி ஜயசேகரவுக்கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் மகன் ஜோஹான் பெர்ணான்டோவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியதே இதற்கான காரணம்.

இந்நிலையில்விருப்புவாக்குகளின் அடிப்படையில்தயாசிறிஜயசேகரமுன்னணியில் இருப்பதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தயாசிறி ஜயசேகர முதலமைச்சர் பதவியைப் பெறும் நேர்க்கில் ஆளும் கட்சியில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டிற்கு பாரியளவில் செலவிடப்படுகின்றது

## கிரியல்ல எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனை செலுத்த முடியாத நிலையில், பொதுநலவாய நாடுகள் அமர்விற்காக அரசாங்கம் பாரியளவில் பணத்தைச் செலவிட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.**



சிங்கள ஊடகம் ஒன்றிற்கு அளித்த நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவதில் எவ்வித தவறும் கிடையாது. எனினும், அதற்காக 15 ஆயிரம் கோடி ரூபா வரையில் செலவிடப்படவுள்ளது. பொருளாதாரம் நலிவடைந்துள்ள நிலையில் காணப்படும் இலங்கை போன்ற நாடுகளில் இவ்வளவு பாரிய தொகையை செலவிடுவது உசிதமாகுமா?

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை நடத்துவதன் மூலம் நாட்டுக்கு மேலும் அபகீர்த்தி ஏற்படக்கூடும். நாட்டின் நன்மதிப்பு உயர்த்தப்படக் கூடும் என்ற கருத்தில் உடன்பாடில்லை.

ஏனெனில் மாநாட்டில் பங்கேற்கும் உலகின் பலம் பொருந்திய நாடுகளின் தலைவர்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து கொழும்பிலிருந்தே கேள்வி எழுப்பக்கூடும்.

இது நாட்டுக்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்தாது. அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாக ஊடகங்கள் எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை வெளியிடுவதில்லை. அமர்வுகளில் பங்கேற்கும் உலகத் தலைவர்களை கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

மேலும் அமர்வுகளில் இந்தியப் பிரதமர் பங்கேற்பார் என்பதில் நம்பிக்கையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நலன்கள் வழங்கப்பட வேண்டுமென கோரி பாரியளவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வரவு செலவுத் திட்ட யோசனை முன்வைக்கப்படவுள்ளது.

சம்பள உயர்வு, மானியங்கள், வாழ்க்கைச் செலவு குறைப்பு போன்ற முக்கிய காரணிகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் போன்றன கூட்டாக இணைந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் இந்தப் போராட்டங்களை ஆரம்பிக்கவுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. போன்ற முக்கிய கட்சிகளும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

பொருட்கள் சேவைகளுக்கான விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு கோரி வீதியில் இறங்கி போராட்டம் நடத்த உள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. (அ-2)

# சரியான ஆணையை வடக்கு மக்கள் எமக்கு தந்துள்ளனர்

## பொன்.செல்வராசா எம்.பி. பெருமிதம்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த வட மாகாண சபை தேர்தல் முடிவானது வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சிறுபான்மை மக்களுக்கான உரிமையை அரசாங்கம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


வடமாகாண மக்கள் சரியான நேரத்தில் சரியான ஆணையை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளனர்.

வடமாகாண சபை தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்குமாறு மக்களிடம் கேட்டிருந்தோம். ஆனால் அதையும் தாண்டி மக்கள் ஆணையைத் தந்துள்ளனர். அதனையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதுடன் இந்த மகிழ்ச்சியில் கிழக்கு மாகாண தமிழ் மக்களும் இணைந்து கொள்கின்றனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும் இதற்காக பெற்றுக் கொள்ளப்படும்.

தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இந்த மாகாணத்தில் ஒன்றிணைந்து வடக்கையும் கிழக்கையும் இணைப்பதன் மூலம் தமிழ் பேசும் சமூகங்கள் சுதந்திரமாக வாழவழிவகுப்பதுடன் இந்த பாரிய வெற்றியில் கிழக்கு மாகாண மக்களும் இணைந்து கொள்கின்றனர்.

இந்தப் பாரிய வெற்றிக்கு காரணமாக இருந்த வடமாகாண மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)




- 1641 - ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களுடன் த மேர்ச்சண்ட் ராயல் என்ற கப்பல் மூழ்கியது.
- 1799-இலங்கையில் அரச ஆணைப்படி சித்திரவதை மற்றும் கொடூரமான தண்டனைகள் நிறுத்தப்பட்டன. மத சுதந்திரம் அமுலுக்கு வந்தது.
- 1846 - நெப்டியூன் கோள் பிரெஞ்சு வானியலாளர் உர்பெயின் ஜோசப் மற்றும் பிரித்தானிய வானியலாளர் ஜோன் அடம்ஸ் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1868 - புவெர்ட்டோ ரிக்கோவில் ஸ்பானிய ஆட்சியாளருக்கெதிராக கிளர்ச்சி ஆரம்பமானது.
- 1884 - ஹேர்மன் ஹொலரித் கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1932-ஹெஜாஸ் மற்றும் நெஜிட் ஆகிய மன்னராட்சிகள் சவுதி அரேபியா என்ற பெயரில் இணைந்தன.
- 1941- நாசிகளின் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் நச்சுவாயுக் கொலைகள் முதற்தடவையாகப் பரிசோதிக்கப்பட்டன.
- 1965- இந்திய-பாகிஸ்தான் போர் முடிவுக்கு வந்தது.
- 1966-நாசாவின் சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனின் கோர்ப்பனிக்கஸ் என்ற இடத்தில் மோதியது.
- 1986- கொழும்பில் தேசிய இயற்கை வரலாற்று நூதன சாலை பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டது.
- 2002-மொசிலா பயர்பொக்ஸ், இணைய உலாவி வெளிவந்தது.

**பிறப்புகள்**

- 1215 - குப்லாய் கான், மங்கோலியப் பேரரசன் (இ. 1294)
- 1930-ரே சார்ல்ஸ், அமெரிக்கப் பாடகர் (இ. 2004)
- 1941 - ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை

**இறப்புகள்**

- 1951 - பி. யு. சின்னப்பா, தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர்
- 1973 - பாப்லோ நெருடா, சிலி நாட்டில் பிறந்த கலைஞர் (பி. 1904)

### பி.யு.சின்னப்பா



1916 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் சின்னப்பாவின் தகப்பனார் அப்போது பிரபலமான நாடக நடிகர். அவருடன் சேர்ந்து சின்னப்பாவும் சிறுவயதிலேயே பாடவும் கற்றுக் கொண்டார். சிலம்பம், மல்லு, குஸ்தி ஆகியவையும் பழகினார்.

தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபா என்ற நாடகக் கம்பனியில் சேர்ந்து நடித்தார்.

**இசைக்கச்சேரி**

தனது 19ஆவது வயதில் நாடகக் கம்பனியில் இருந்து விலகி நன்னய்ய பாகவதர், புதுக்கோட்டை சிதம்பர பாகவதர் போன்றோரிடம் இசைப்பயிற்சி பெற்று இசைக்கச்சேரிகள் செய்து வந்தார். அத்துடன் புதுக்கோட்டையில் இராமநாத ஆச்சாரியாரிடம் சிலம்பம், பாணாத்தடி வீசுதல் ஆகியவைகளை அபிவிருத்தி செய்து கொண்டார். பாரந்தூக்குவதில் இவருக்கு பல விருதுகளும் கிடைத்திருக்கின்றன. எஸ். ஆர். ஜானகியின் நாடகக் கம்பனியில் சேர்ந்து இலங்கை முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார்.

**திரைப்படங்களில் நடிப்பு**

1938 ஆம் ஆண்டில் பஞ்சாப் கேசரி, அநாதைப்பெண், யயாதி போன்ற படங்களில் நடித்தார். தொடர்ந்து சுமார் 25 படங்களில் அவர் நடித்திருந்தார்.

1951 ஆம் ஆண்டு செப்டெம்பர் 23 இல் தமது 35ஆவது வயதில் சின்னப்பா புதுக்கோட்டையில் காலமானார். கடைசியாக இவர் நடித்துக்கொண்டிருந்த படம் சுதர்சன் இவர் இறந்தபின்னர் வெளிவந்தது.

# வடக்கில் ஜனநாயக உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளது

## அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று தசாப்தங்களாக வடக்கு மக்கள் முற்றாக இழந்திருந்த ஜனநாயக உரிமையை மீண்டும் பெற்றுக் கொடுத்து. இந்நாட்டில் அனைத்து இன மக்களும் எவ்வித பாகுபாடுமின்றி சம உரிமையுடன் வாழ்கின்றனர் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மக்கள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமை அமைப்புகள் என அனைவருக்கும் உணர்த்தியுள்ளார் என்று மக்கள் தொடர்பாடல் ஊடகத்துறை அமைச்சின் மேற்பார்வை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகளுக்கு ப் பின்னர் முதற் தடவையாக வடக்கில் நடைபெற்ற மாகாணசபை தேர்தல் குறித்து அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக பயங்கரவாதிகளால் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டதற்கு பதிலாக இன்று தேர்தல் விண்ணப்பங்கள் பகிரும் யுகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினாலேயே உருவானது. இது ஜனநாயகத்துக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணத்தில் மிக அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றமையே இதற்கு சிறந்த சான்று. கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் இலங்கை மக்கள் உள்ளனர். (அ-2)




# சிறுவர் அரங்கம்

## பால் குடிக்காத பூனை

"என்ன வியப்பு! பாலைக் கண்டால் ஓடிவிடும் பூனையை நான் இதுவரை கண்டதில்லை!" என கிருஷ்ணதேவராயர் வியப்பில் ஆழ்ந்தார். "காவலர்களே! போய் ஒரு கோப்பை பாலைக் கொண்டு வந்து பூனையின் முன்னால் வையுங்கள். ராமா, நீ கூறுவது உண்மையானால், நான் ஒரு பை நிறைய தங்க நாணயங்களைப் பரிசாக அளிப்பேன்" என்றார் மன்னர்.

மன்னரின் ஆணை உடன் நிறைவேற்றப்பட்டது. காவலர்கள் பூனையின் முன்னால் ஒரு கோப்பைப் பாலை வைத்தனர். அனைவரும் ஆச்சரியப்படும் வகையில், பூனை 'மியாவ்' எனக் கத்தியவாறு பாலைக் கண்டதும் ஓடியது.

"ஹ்ம்!" என பெருமூச்சு விட்டவாறு கிருஷ்ணதேவராயர் ஓடும் பூனையைப் பிடித்துக் கொண்டு வருமாறு காவலர்களிடம் ஆணையிட்டார். அதன்படி காவலர்கள் செய்தனர்.

அவர் பூனையின் வாயைத் திறக்குமாறு கூறினார். அதனைப் பரிசோதித்தார்.

"ஆஹா! நான் நினைத்தது போன்றே உள்ளது! அந்த பாவப்பட்ட மிருகத்தின் வாய் பயங்கரமாக வெந்திருக்கிறது. ராமா! எப்படி இவ்வாறு நடந்தது? நீ பூனைக்கு மிகவும் சூடான பாலை வைத்துள்ளாய் என்பது எனக்கு விளங்குகிறது. அதனாலேயே பூனை பாலைக் கண்டால் ஓடுகிறது!" என்று அவர் கூறினார்.



(5)

தெனாலிராமன் சற்று பயந்தாலும் மிடுக்காகக் கூறினான். "மன்னரே! பூனைக்கு அனைத்துப் பாலையும் கொடுப்பதை விட, மக்கள் பாலை அருந்தி பலம் பெறுவது நலம் அல்லவா? மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதே மன்னனின் முதல் கடமை. அதுவுமல்லாமல் பூனை தனது பசியைத் தீர்த்துக்கொள்ளப் பாலைக் குடித்தால் எவ்வாறு எலிகளை தனக்கு இரையாக்கிக் கொள்ளும்? நான் இவ்வாறு உறுதியாக தங்களிடம் கேட்டதற்கு என்னை மன்னியுங்கள்" என்றான் ராமன் பணிவுடன்.

கிருஷ்ணதேவராயர், தெனாலிராமன் கூறுவதில் உண்மையுள்ளதை உணர்ந்தார். அவர் ராமனைப் புகழ்ந்து நூறு தங்கக் காசுகள் பரிசாக வழங்கினார்.



(௬)

(முற்றும்)

## வாக்குறுதி

ஒரு முறை அக்பர், பீர்பாலுக்குப் பரிசளிப்பதாக வாக்களித்தார். ஆனால், அவர் நாட்டு நலனில் தனது கவனத்தைத் திருப்பியதால், அதனைப்பற்றி மறந்து விட்டார். பீர்பால், அக்பரிடம் எவ்வாறு இதனை நினைவுக்குக் கொண்டுவருவது என யோசித்தார்.

அவருக்கு அக்பரிடம் இதுபற்றிப் பேச ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு நாள் யமுனை நதியோரம் இருவரும் நடந்து சென்றபோது, அக்பர் ஒரு ஒட்டகக் கூட்டம் அவ்வழியே கடந்து சென்றதைப் பார்த்தார்.



(1)

"பீர்பால், ஒட்டகத்தின் கழுத்து ஏன் வளைந்துள்ளது எனக் கூற முடியுமா?" எனக் கேட்டார் அக்பர்.

"பாதுஷாவே! நமது புனித மதப் புத்தகங்களில் ஒட்டகத்தின் கழுத்து ஏன் வளைந்துள்ளது என சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில், அது தான் சொன்ன வாக்கைக் காப்பாற்றாமல் மறந்து விட்டதால் கடவுள் அவ்வாறு தண்டனை அளித்துள்ளார்" என பீர்பால் பதிலளித்தார்.

உடனே அக்பர், பீர்பாலுக்கு அளித்த வாக்குறுதியை நினைத்தார். இருவரும் அரண்மனை திரும்பியவுடன், அக்பர், பீர்பாலுக்கு வாக்களித்தவாறு விலையுயர்ந்த பரிசுகளை வழங்கினார்.



(௨)


# சர்வதேச நிலைப்பாடுகளை மாற்றியமைக்குமா?

ஐ.நா பொதுச்செயலர் பான் க மூன் அறிக்கை வெளியிடும் அளவுக்கு, வடக்கு மாகாண சபைத் தேர்தல் சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்று விட்டது ஆச்சரியமான விடயம் தான். உலக வரைபடத்திலேயே இலங்கைத்தீவு எடுத்த எடுப்பிலேயே கண்டுபிடித்து விடமுடியாத ஒரு சிறு புள்ளி தான். அந்தச் சிறு புள்ளியின் மிகச் சிறிய பகுதியான - வடக்கு மாகாணசபைத் தேர்தலை உலகம் எந்தளவுக்கு உன்னிப்பாக அவதானிக்கிறது என்பதை, ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் வெளியிட்ட அறிக்கையே வெளிப்படுத்தியுள்ளது.



வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமான வாய்ப்பாக அமையும் என்பது, ஐ.நா பொதுச் செயலரது மட்டுமன்றி பொதுவாகவே சர்வதேச சமூகத்தினதும் கருத்தாக இருந்து வந்துள்ளது.

இலங்கை விவகாரத்தில், சர்வதேச சமூகத்தின் கண்ணோட்டம் விடுதலைப் புலிகளின் காலகட்டம் வரை ஒருவகையானதாக இருந்தது.



அதாவது இலங்கையில் நடந்து வந்த மூன்று தசாப்தகாலப போரை, சர்வதேச சமூகம் பெரும்பாலும் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன் மட்டுமே பார்த்தது. அதற்கு அப்பால், தமிழர்களின் பிரச்சினைகள், எதிர்கொள்ளும் நெருக்கடிகளை சர்வதேச சமூகம் கண்டுகொள்ளவில்லை. சர்வதேச சமூகம், பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன், தமிழர் பிரச்சினையை ஒருதலைபட்சமாக அணுகியது.

இதனால், சர்வதேச தீவிரவாத ஒழிப்புத் திட்டத்துக்குள், விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான நடவடிக்கையும் கொண்டு வரப்பட்டது. புலிகளின் இலக்கும், தாக்குதல்களும் இலங்கைத் தீவுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அரசு அல்லாத ஒரு ஆயுத அமைப்பு உலகில் வலுவாக வளர்வது ஏனைய ஆயுதக் குழுக்களுக்கு உந்து சக்தியாக இருக்கும் என்று அமெரிக்கா கருதியது. அதனால், புலிகள் விடயத்தில் அமெரிக்கா தயவுகாட்ட நினைக்கவில்லை.

இலங்கையும், அமெரிக்காவும், இணைந்து கொண்டதன் விளைவாக, புலிகளுக்கு பலத்தைக் கொடுத்த - ஆயுத விநியோக வழிகள் துண்டிக்கப்பட்டன.

கடல்வழியாக ஆயுதங்கள் கிடைப்பதை தடுக்க, அமெரிக்க செய்மதித் தொழில்நுட்ப உதவி இலங்கைக் கடற்படைக்கு கை கொடுத்தது.

அமெரிக்காவின் உதவியுடன் விடுதலைபுலிகளின 12 ஆயுதக் கப்பல்களைத் தாம் மூழ்கடித்ததாக அண்மையில்கூட பாதுகாப்புச்செயலர் கோத்தாபய ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச கடற்போக்குவரத்து விநியோக வழிகள் அடைப்பட்டுப் போனதும், விடுதலைப்புலிகள்ளை இலங்கைப் படையினரால், மிக இலகுவாக நசுக்க முடிந்தது. ஆனால், இந்தப் போர் முடிவுக்கு வந்த பின்னர் தான், இந்தச் சிக்கலுக்குள் இருக்கும் பல உண்மைகள் சர்வதேச சமூகத்துக்குத் தெரியவந்துள்ளது.

இலங்கையில் போர் நடப்பதற்கு புலிகள் தான் காரணம் என்று சர்வதேச அளவில் உருவாக்கப்பட்ட கருத்தை, போருக்குப் பின்னரும் நீடிக்கும் முரண்பாட்டுச் சூழல் முற்றாகவே உடைத்து விட்டது.

போருக்குப் பிந்திய நான்கு ஆண்டுகளில், மனித உரிமைகள் பாதுகாக்கப்படாமையும், தமிழர்களின் பாதுகாப்பும் உரிமைகளும் உறுதிப்படுத்தப்படாமையும், அதிகாரங்கள் தமிழர்களுக்கு பகிரப்படாமையும், சர்வதேச அளவில், இலங்கைப் பிரச்சினை குறித்த நிலைப்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு - எதிர்பார்ப்புகள் என்ன என்பது இப்போது சர்வதேச சமூகத்துக்கு ஓரளவு புரியத் தொடங்கியுள்ளது. இப்போது இலங்கை அரசாங்கத்தின் மீது திணிக்கப்படுகின்ற அழுத்தங்கள் அனைத்துமே, போரின்போது ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டதற்காக, சர்வதேச சமூகம் செய்யும் பிராயச்சித்தம் என்று கூட எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கை அரசாங்கம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை. தமிழர்களை சமமாக நடத்தவில்லை. போரின் போது நடந்த குற்றங்களுக்கு நீதி வழங்கவில்லை என்ற உண்மைகள், சர்வதேச சமூகத்தினால் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட விவகாரமாகியுள்ளது.

போருக்குப் பிந்திய நான்கு ஆண்டுகளும், இலங்கை அரசாங்கத்தின் சுயரூபத்தை சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்தி விட்டன. ஆனாலும், தமிழர்கள் என்ன நினைக்கிறார்கள் - அவர்களின் எதிர்பார்ப்புகள் என்ன, விருப்பங்கள் என்ன என்பதை அறிந்துகொள்வதற்கும் சர்வதேச சமூகம் ஆர்வமாக இருக்கிறது.

வடக்கில் தேர்தல் நடத்தப்படுவதுடன் சர்வதேச சமூகம் திருப்திப்பட்டுவிடாது.

தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும் செய்தியும் அவர்களுக்கு முக்கியம்.

ஏனென்றால் அதுதான், இலங்கை தொடர்பாக, தமிழர் பிரச்சனை தொடர்பான எதிர்கால அணுகுமுறைகளை தீர்மானிப்பதற்கான அடிப்படையாக இருக்கும்.

பொதுவாக ஜனநாயக வழிமுறையை நம்பும் சர்வதேச சமூகம், மக்களின் கருத்தை அறியும் கருவியாக தேர்தலையே கருதுகின்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில், தமிழர்களின் உரிமைகளையும், எதிர்பார்ப்புகளையும் முன்வைத்து போட்டியிட்ட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபுறத்திலும், எந்தவிதமான உரிமைகள் குறித்த வாக்குறுதிகளுமின்றி களத்தில் இறங்கிய அரசதரப்பு இன்னொரு புறத்திலுமாக, நின்றன.

இந்த எதிரும் புதிருமான கொள்கை நிலைப்பாடு சர்வதேச சமூகத்துக்கு மிகவும் சாதகமாகி விட்டது. இருதரப்புமே, ஏறத்தாழ ஒரேவிதமான, விடயங்களை முன்வைத்து தேர்தலை எதிர்கொண்டிருந்தால், தமிழ் மக்களின் நிலைப்பாட்டைக் கணிப்பதில் அவர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆனால், தமிழர்கள் எந்தத் தரப்பின் வழிமுறையின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர், அவர்கள் எதிர்பார்ப்பது அபிவிருத்தியையா அல்லது அடிப்படை உரிமைகளையா என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு இந்தப் போட்டி இலகுவான வாய்ப்பை அளித்தது.

இந்தத் தேர்தலின் முடிவு சர்வதேச சமூகத்தின் எதிர்கால நகர்வுகளுக்கு முக்கியமான அடிப்படையாக இருக்கப் போகிறது.

அரசதரப்பு வெற்றி பெற்றால், தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்தி, இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச சமூகம் கொடுத்து வரும் அழுத்தங்கள் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச அமர்வுகளில், இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் இனிமேல் கொண்டு வரப்பட்டால்கூட, தமிழ் மக்கள் தமது பக்கமே நிற்கிறார்கள் என்று அரசாங்கத்தினால் சுலபமாக சமாளிக்க முடியும்.

இலங்கைக்கு எதிராக, எத்தகைய நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டாலும், அரசதரப்பு இதனை வைத்தே தன்னை முழுமையாகப் பாதுகாத்துக் கொள்ளும். அதே வேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், அது தமிழர் பிரச்சினை பற்றிய தமிழர் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய புதிய நிலைப்பாடுகளை சர்வதேச சமூகம் எடுப்பதற்கு காரணமாகலாம். தமிழ்மக்கள் விரும்பும் தீர்வு என்ன என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்வதற்கும் அதற்கேற்ப தமது செயல்முறைகளை வகுத்துக் கொள்வதற்கும் இந்ததேர்தல் அவர்களுக்கு உதவக் கூடும்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், தமிழர்களின் உரிமைகள் அதிகாரங்களை உறுதிப்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசு மீது கொடுக்கப்படும் அழுத்தங்களும் இன்னும் வேகம் பெற வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக, இலங்கை மீது கடுப்பில் உள்ள அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும், அது வசதியான வாசல்களை திறந்து விடும். விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையும் தாண்டி தமிழர்களின் பிரச்சினை ஆழமானது, அவசியம் தீர்க்கப்பட வேண்டியது என்ற கருத்தை அது உருவாக்கும்.

போரின் போது, சர்வதேச சமூகம் ஒருதலைப்பட்சமாக நடந்து விட்டது என்ற உண்மை விளங்கி கொள்ளப்பட்டதாலும், தமிழர்களின் பிரச்சினை தீவிரமானது என்று உணர்ந்து கொண்டதாலும்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சர்வதேச சமூகம் இராஜதந்திர அந்தஸ்தைக் கொடுத்துள்ளது. அதற்கும் அப்பாற்பட்ட சில முடிவுகளை சர்வதேச சமூகம் எடுப்பதற்கு இந்தத் தேர்தல் அடிப்படையாக அமையலாம். இந்த நிலையில், இலங்கை தொடர்பான சர்வதேச நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளும் வகையில் வடக்கு மாகாணத் தமிழர்கள் தீர்ப்பளித்துள்ளார்களா?

**இராணுவ ஆய்வாளர் சுபத்ரா-**

# நிரந்தர வைத்தியரை நியமிக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

**அளம்பில் பிரதேச வைத்தியசாலை நிரந்தர வைத்தியர் இன்றியும் பலவளப்பற்றாக்குறைகளுடனும் இயங்கி வருகின்றமையால் நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது.**

கடந்த 1985 ஆம் ஆண்டு முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் அளம்பில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் உருவாக்கப்பட்ட இவ் வைத்தியசாலை போருக்குப்பின் 2010 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவருகின்றது.

இவ் வைத்தியசாலையை செம்மலை,செம்மலை கிழக்கு, அளம்பில் வடக்கு, அளம்பில் தெற்கு, உப்புமா வெளி, குமுழமுனை கிழக்கு, குமுழமுனை மேற்கு, குமுழமுனை மத்தி, தண்ணிமுறிப்பு உட்பட 44 கிராமங்களில் வாழும் 2ஆயிரத்து85 குடும்பங்கள் பயன்படுத்துகின்றனர்.

இவ் வைத்தியசாலைக்கு இரண்டு நிரந்தர வைத்தியர் தேவைப்படுகின்ற போதிலும் இங்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் கூட இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் இங்கு நிரந்தர மருந்தாளர், நிரந்தர தாதி, பல்வைத்தியர் போன்றோரும் இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இங்கு பிரசவ அறை வசதி, ஆண், பெண் நோயாளர்களுக்கான தனித்தனி விடுதி வசதி என்பனவும் கிடையாது.

மின்சார வசதி, கணனி வசதி, நிரந்தர நோயாளர் காவு வண்டியுட்பட வண்டி சாரதியும் இங்கு இல்லை,பெயர் பலகையும் அமைக்கப்படவில்லை. காலை 8 மணி முதல் 12 மணிவரையும் பி.ப.2 மணி முதல் பி.ப.4 மணிவரையும் மருத்துவ சேவை இடம் பெறுகின்றது. இரவு வேளைகளில் இச் சேவை இடம்பெறுவதில்லை.

இதனால் 12 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள முல்லைத்தீவு வைத்தியசாலைக்கும் 16 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முல்லை மாவட்ட வைத்தியசாலைக்குமே நோயாளர்கள் செல்ல வேண்டியுள்ளது. எனவே, உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி மக்களும் நோயாளிகளும் கோரிக்கை ஒன்றைமுன்வைத்துள்ளனர்.(ம-267)

# இரு குழுக்களுக்கிடையே மோதல்; கண்காணிப்பாளர் மீதும் தாக்குதல்

(பூந்தோட்டம்)

வடமாகாண சபைத் தேர்தல் முடிவுகள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை மாவட்ட செயலகத்துக்கு முன்னால்இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் தேர்தல் கண்காணிப்பாளர் ஒருவரும் பிராந்திய ஊடகவியலாளர் ஒருவரும் தாக்குதலுக்குள்ளாயினர்.

நேற்று காலை 9 மணியளவில் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் திரண்ட சுமார் 150 இற்கும் மேற்பட்டோர் அவ்விடத்தில் கூடிநின்ற வேளைவாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை தொடர்ந்த போது கைகலப்பு ஏற்பட்டு அவ்விடத்துக்கு நிலைமைகளை கண்காணிப்பதற்காக சென்ற கபே தேர்தல் கண்காணிப்பு குழுவினரையும் பிராந்திய ஊடகவியலாளரையும் கை கலப்பில் ஈடுபட்டவர்கள் தாக்கியுள்ளனர்.

இதன் காரணமாக கண்காணிப்பாளரான ரி.ரஜீபன் மற்றும் ஊடகவியலாளரான எஸ். எம்.சர்ஜான் ஆகியோர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த கலகம் அடக்கும் பொலிஸார் அங்கு கூடி நின்றவர்களை துரத்தி மாவட்ட செயலக சூழலை சுமுகமான நிலைக்கு கொண்டு வந்தனர். இந்நிலையில் கபே அமைப்பினர் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (ம-250-266)

## பவ்ரல் அமைப்பின் பணியாளர் மீது தாக்குதல்

பவ்ரல் அமைப்பின் பணியாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சாந்தபுரத்தை சேர்ந்த ராசுரவிச்சந்திரன் (வயது39) என்ற பவ்ரல் அமைப்பின் பணியாளரே தாக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ம-259)


அதி விரைவு சேவை
உள் நாடு, வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
உங்கள் உறவிகளுக்கு 220றகு மேற்பட்ட நாடுகளுக்கான அதிவிரைவு சேவை இப்பொழுது பெற்றுக்கொள்ள



மிகக்குறைந்த கட்டணம்:
3 தொடக்கம் 5 நாட்களில் ஆன சேவை (தேவை ஏற்படின் 3 நாட்கள் சேவை கட்டணம் வேறுபடும்)
நீங்கள் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைக்கப்படும்.
இது போன்று மற்றைய நாடுகளுக்கும் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
முன்னணி பொதிகள் சேவை நிறுவனத்துக்கூடன சேவை
இந்த கட்டண சலுகை குறிப்பிட சில தினங்கள் மட்டுமே

எங்கும் இல்லாத கட்டணம்
(உதாரணமாக) கனடா 1 Kg தொடக்கம் 10 Kg 1 Kg கட்டணம்
1300/- 11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg -900/- மட்டும் அறவிடப்படும்

திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
TCN Express இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு - 6
(சி/4768)









ஒரு வீட்டின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்று அதன் கூரை என்பதால் நாம் எமது புதிய வீட்டினைக் கட்டும்போது கூரைக்கான மிகச் சரியான மூலப்பொருளைத் தேர்ந்தெடுப்பது அத்தியாவசியமாகும். எமது விநியோகஸ்தரும் தச்சுப் பணியாளரும் 'ராம்கோ' கூரை மற்றும் சீலிங் தகடுகளை தெரிவு செய்யுமாறு எமக்கு ஆலோசனைகளை வழங்கியதையிட்டு, நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எஸ்.எல்.எஸ் (SLS) மற்றும் ஐ.எஸ்.ஓ (ISO) சான்றிதழுடன் 'கூடிய உயர் தரத்திலான 'ராம்கோ' கூரைத் தகடு உற்பத்திகள் எமது வீட்டை இனியதோர் இல்லமாக மாற்றியுள்ளன.

"சரியானதையே தேர்ந்தெடுங்கள், ஆனந்தமாக வாழுங்கள்"

SLS 9-1 SLS 9-2

Sri Ramco Lanka (Private) Limited
441, SG Arcade, 1st Floor, Sri Sangaraja Mawatha. Colombo 10. Sri Lanka.
Tel. +94(0) 11 2471143 - 44, +94(0) 11 4619949 - 59 Fax +94(0) 11 4619979.

Ramco
சக்தியின் புதிய அலை

ADcom
(சி/4782)

# ‘தனி அரசுக்கு ஆணை’

## வடக்கில் வரலாறு காணாத வெற்றி ஆட்சி அமைக்கிறது கூட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

முடிவடைந்த மாகாண சபைத் தேர்தலில் மொத்தமாக உள்ள 38 ஆசனங்களில் 30 ஆச னங்களைக் கைப்பற்றி தமிழரசுக் கட்சி வரலாறு காணாத வெற்றி பெற்றுள்ளது. இத்தேர்தலில் தமிழர சுக் கட்சியே வெற்றிபெறும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அனைவரது எதிர்பார்ப்புக்களுக்கும் மேலாக தமிழரசுக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மையொன்றை வடமாகாண மக்கள் வழங்கியுள்ளார்கள். இதன்மூலம் தனியரசுக்கான ஆணையை மக்கள் வழங்கியுள்ளனர். *(16 ஆம் பக்கம் பார்க்க)*

## மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகள்

### யாழ்ப்பாணம் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 213 907 | 84.37 | 14 |
| ஐ.ம.சு.கூ | 35 995 | 14.20 | 2 |
| ஐ.தே.க | 855 | 0.34 | |
| மற்றவை | | | |
| செல்லுபடியானவை | 253 542 | 92.59 | |
| நிராகரிக்கப்பட்டவை | 20 279 | 7.41 | |
| மொத்தவாக்குகள் | 273 821 | 64.15 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 426 813 | | |

### கிளிநொச்சி மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 37 079 | 81.57 | 3 |
| ஐ.ம.சு.கூ | 7 897 | 17.37 | 1 |
| ஈழவர் ஜனநாயக மு. | 300 | 0.66 | |
| மற்றவை | | | |
| செல்லுபடியானவை | 45 459 | 90.57 | |
| நிராகரிக்கப்பட்டவை | 4 735 | 9.43 | |
| மொத்தவாக்குகள் | 50 194 | 73.17 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 68 600 | | |

### முல்லைத்தீவு மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 28 266 | 78.56 | 4 |
| ஐ.ம.சு.கூ | 7 209 | 20.04 | 1 |
| ஸ்ரீ.மு.கா | 199 | 0.55 | |
| ஐ.தே.க | 197 | 0.55 | |
| செல்லுபடியானவை | 35 982 | 92.73 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2 820 | 7.27 | |
| மொத்தவாக்குகள் | 38 802 | 72.28 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 53 683 | | |

### மன்னார் மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 33 118 | 62.22 | 3 |
| ஐ.ம.சு.கூ | 15 104 | 28.38 | 1 |
| ஸ்ரீ.மு.கா | 4 571 | 8.59 | 1 |
| ஐ.தே.க ‘ | 187 | 0.35 | |
| செல்லுபடியானவை | 53 226 | 94.68 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2 989 | 5.32 | |
| மொத்தவாக்குகள் | 56 215 | 74.22 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 75 737 | | |

### வவுனியா மாவட்டம்

| கட்சிகள் | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 41 225 | 66.10 | 4 |
| ஐ.ம.சு.கூ | 16 633 | 26.67 | 2 |
| ஸ்ரீ.மு.கா | 1 991 | 3.19 | |
| ஐ.தே.க | 1 769 | 2.84 | |
| செல்லுபடியானவை | 62 365 | 93.39 | |
| நிராகரிக்கப்பட்டவை | 4 416 | 6.61 | |
| மொத்தவாக்குகள் | 66 781 | 70.56 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 94 644 | | |

## வடக்குமாகாண தேர்தல் ஒரே பார்வையில்

| | | | |
|---|---|---|---|
| இ.த.அ.க (த.தே.கூ) | 353 595 | 78.48 | 30 |
| ஐ.ம.சு.கூ | 82 838 | 18.38 | 07 |
| ஸ்ரீ.மு.கா | 6 761 | 1.50 | 01 |
| செல்லுபடியானவை | 405 574 | 92.75 | |
| நிராகரிக்கப்பட்டவை | 35 239 | 7.25 | |
| மொத்தவாக்குகள் | 485 813 | 67.52 | |
| பதிவுசெய்யப்பட்டவை | 719 477 | | |

### த.தே.கூ. உறுப்பினர் இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குமாகாண சபைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தமது அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து இன்று பிற் பகல் 3.00 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் ஊடகவியலாளரைச் சந்தித்து விளக்கம் அளிக்க வுள்ளது.

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட் பாளர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் இப் பத் திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொள்கின்றனர்.

இதன்போது வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கப்பட வுள்ளது. (எ)

### இந்திய மீனவர்கள் 20 பேர் கைது

(யாழ்ப்பாணம்)


பாக்குநீரிணையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய மீனவர் கள் 20 பேரை இலங்கை கடற் படையினர் இன்று அதிகாலை கைதுசெய்துள்ளனர்.

இந்த மீனவர்கள் இந்திய கடற்பரப்பிலா அல்லது சர்வ தேச கடல் எல்லையிலா கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பது தொடர்பில் உடனடியாகத் தெரிய வரவில்லை என மீன்பிடித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கோபிநாத் தெரி வித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள 20 இந்திய *(16ஆம் ப்க்கம் பார்க்க)*

## மக்கள் கேட்கும் உரிமையை வென்று கொடுப்போம்!

### வடக்கின் முதலமைச்சர் வலம்புரிக்கு தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நாம் கேட்டதனை மக்கள் எமக்குத் தந்து விட்டனர். நாங்கள் மக்கள் கேட்கும் உரிமைகளை வழங்குவோம் என வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வலம்புரிக் குத் தெரிவித்தார்.

வடக்குமாகாணசபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் அமோக வெற்றிபெற்றது.

இம்மாபெரும் வெற்றி குறித்து அவர் வலம்புரிக்கு அளித்த விசேட செவ்வியில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண தமிழ் மக்கள் தங்களுடைய எண்ணத்தினை இத் தேர்தலில் தீர்க்கமாக வெளிப்படுத்தி யுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு வடக்கு மக் களுக்குரிய வசதி செய்து கொடுக் கப்படாமையினால் 2009 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெறவில்லை.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் எம்மக்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத் துள்ளது.

அதில் தமது உள்ளார்ந்த மனங் களை வெளிப்படையாகவே மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

இத்தேர்தலில் கூட்டமைப் பினை வெற்றிபெறச் செய்துள்ளதன் மூலம் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞா பனத்தினையும் தமிழ்மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்றே கருத வேண்டும். *(16ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்.விருப்பு வாக்குகளை வெளியிடுவதில் தாமதம்

### மன்னாரும் வெளியாகவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர் தலில் யாழ்.மாவட்டத்தில் வெற்றி பெற்ற வாக்காளர்களின் விருப்பு வாக்குகளை வெளியிடுவதில் சிக் கல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்குமாகாண சபைத் தேர் தல் நேற்று நடைபெற்று நேற்று நள்ளிரவு முதல் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டுவந்தன.

இந்நிலையில் விருப்புவாக்கு களின் அடிப்படையில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் இன்று நண்பகல் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது எனினும் அப் பெறுபேறுகளை வெளியிடு வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் இச் செய்தி அச்சுக் குப் போகும்வரை யாழ்.மாவட்டத் தில் வெற்றிபெற்றவர்களின் விருப்பு வாக்குகள் எவையும் வெளியிடப் படவில்லை.

இதேவேளை வவுனியா மாவட் டத்தில் தமிழரசுக் கட்சி சார்பாக பி.சத்தியலிங்கம் (19,656), கே. லிங்கநாதன் (11,901), எம். தியாகராசா (11, 681), ஜ.இந்திர ராஜா (11, 535) ஆகியோரும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் ட மைப்பின் சார்பாக தர்மபால சேனாவிரத்ன (5,148), எ.ஜெய திலக (4,806) ஆகியோரும் தெரிவு *(16ஆம் பக்கம் பார்க்க)*





கோண்டாவில் சமுர்த்தி வங்கியில் வாழ்வாதாரம், சுயதொழில், கடன் விழிப்புணர்வு கூட்டம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ந. சிவகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது...

# மத்திய மாகாண சபை அரசின் வசமானது

(கொழும்பு)

மத்திய மாகாண சபையை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

மத்திய மாகாணத்துக்கான தேர்தலில் நுவரேலியா, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய அனைத்து மாவட்டங்களில் ஆளும் ஐக்கிய மகைள் சுதந்திர கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது.

அந்தக் கட்சிக்கு அங்கு மொத்தமாக (34 இடங்களும், போனசாக 2 இடங்களுமாக) 36 இடங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 16 இடங்களும். ஜனநாயகக் கட்சிக்கு 2 இடங்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பி பிரிவுக்கு 2 இடங்களும், மலையக மக்கள் முன்னணிக்கு ஒரு இடமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளன.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இங்கு ஆளும் கட்சியில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

கண்டி மாவட்டத்தில் ஆளும் கட்சி 16 இடங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 9 இடங்களையும், ஜனநாயகக் கட்சி (சரத்பொன்சேகா கட்சி) 2 இடங்களையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (பி பிரிவு) ஒரு இடத்தையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு இடத்தையும் பெற்றுள்ளன.

மாத்தளையில் ஆளும் கட்சி 7 இடங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 3 இடங்களையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பி பிரிவு ஒரு இடத்தையும் பெற்றுள்ளன.

நுவரேலிய மாவட்டத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் கூட ஆளும் கட்சியே முன்னணி பெற்றுள்ளது.

அதற்கு அங்கு 11 இடங்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 4 இடங்களும், மலையக மக்கள் முன்னணிக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளன. (எ)

# வட மேல் மாகாணத்தில் அரசுக்கு 34 ஆசனங்கள்

(கொழும்பு)

வடமேல் மாகாண சபைக்கான தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு வெற்றிபெற்றது.

மொத்தமுள்ள 52 இடங்களில் ஆளும் கட்சி (நேரடியாக 32, 2 போனஸ்) 34 இடங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 12 இடங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2 இடங்களையும், ஜனநாயகக் கட்சி 3 இடங்களையும், மக்கள் விடுதலை முன்னணி ஒரு இடத்தையும் கைப்பற்றியுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் ஆளும் கட்சிக்கு 23 இடங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 7 இடங்களும், ஜனநாயகக் கட்சிக்கு 2 இடங்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றுக்கு தலா ஒரு இடமும் கிடைததுள்ளன.

புத்தளத்தில் ஆளும் கட்சிக்கு 9 இடங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 5 இடங்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு இடமும் ஜனநாயகக் கட்சிக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளன். (எ)

# வடக்கில் ஜனநாயக உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளது

## அஸ்வர் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று தசாப்தங்களாக வடக்கு மக்கள் முற்றாக இழந்திருந்த ஜனநாயக உரிமையை மீண்டும் பெற்றுக் கொடுத்து. இந்நாட்டில் அனைத்து இன மக்களும் எவ்வித பாகுபாடுமின்றி சம உரிமையுடன் வாழ்கின்றனர் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மக்கள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமை அமைப்புகள் என அனைவருக்கும் உணர்த்தியுள்ளார் என்று மக்கள் தொடர்பாடல் ஊடகத்துறை அமைச்சின் மேற்பார்வை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

30 ஆண்டுகளுக்கு ப் பின்னர் முதற் தடவையாக வடக்கில் நடைபெற்ற மாகாணசபை தேர்தல் குறித்து அரசின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக பயங்கரவாதிகளால் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டதற்கு பதிலாக இன்று தேர்தல் விண்ணப்பங்கள் பகிரும் யுகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினாலேயே உருவானது. இது ஜனநாயகத்துக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணத்தில் மிக அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றமையே இதற்கு சிறந்த சான்று. கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் ஜன நாயக உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் இலங்கை மக்கள் உள்ளனர். (அ-2)

# மூன்றாவது சக்தியாக பொன்சேகாவின் கட்சி

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தலைமையிலான ஜனநாயகக் கட்சி நடந்து முடிந்த மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தலில் மூன்றாவது சக்தியாக உருவாகியுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக கூடுதலான வாக்குகளை பெற்று மூன்றாவது அணியாக உருவெடுத்திருந்த மக்கள் விடுதலை முன்னணியை நான்காம் அல்லது ஐந்தாம் இடங்களுக்கு தள்ளி மூன்றாவது சக்தியாக ஜனநாயக கட்சி உருவாகியுள்ளது.

இவ்விரு மாகாணங்களிலும் மக்கள் விடுதலை முன்னணியைவிட கூடுதலாக வாக்குகளை ஜனநாயகக்கட்சி பெற்றுள்ளதுடன் ஆசனங்கள் சிலவற்றையும் பெற்று கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# மக்கள் கேட்கும் உரிமை...

மக்கள் நாம் கேட்டதனை தந்து விட்டனர். இனி மக்கள் கேட்பதனை நாம்வழங்கு வோம்.

இயலுமான வரையில் மக்கள் மனங்களில் உள்ள குறைகளை குறைக்க நாம் முயற்சி செய்வோம்.

இத்தேர்தலில் வடக்குமாகாண சபையில் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையில் வெற்றி பெற்றுள்ளதன்மூலம் எம்மீதான எதிர்பார்ப்பும் அதிகம் ஏற்பட்டுள்ளது.

ஆகையால் உடனடியாக சாதிக்க முடியாது என்பதனை தெளிவுபடுத்துகிறேன். எனினும் எம்மால் முடிந்த வரை முயற்சி செய்வோம்.

இத்தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் மூலம் மக்களின் எதிர்பார்ப்பு, மனோதிடம், நம்பிக்கை, உறுதி என்பன எம்மை வியக்க வைக்கிறது.

மக்களின் மனநிலை எமக்குப் புரிகின்றது. நாம் அவர்கள் கேட்டதனை நிச்சயம் வழங்குவோம்.

இதுவரை காலமும் தேர்தலில் காட்டாத சிரத்தையினை அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமது வாக்குகளை பயன்படுத்தி எமது அரசியல் பயணத்தின் உறுதுணையினை ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வெற்றியின் மூலம் தமிழ் மக்கள் புலிகளை ஆதரிக்கின்றனர் என அரசு கூறியிருக்கின்றது.

தமிழ்மக்களின் பிரச்சினை தீர்க்கப்படாத போது அரசு தமிழ்மக்களுக்கு புலிப்பட்டம் குத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையைக் கூட அவர் ஒரு தமிழராகக் காணப்படுவதால் புலி என கூறுகின்றனர்.

ஆனால் சர்வதேசம் அரசின் போலித்தனத்தையும் ஏமாற்றுவித்தையினையும் இனி நம்பப் போவதில்லை.

எல்லா மக்களையும் எல்லா நேரமும் ஏமாற்ற முடியாது என்பதனை இவ்வரசு இத்தேர்தலின் மூலம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

அரச ஊழியர்களில் பெரும்பான்மையினர் எமக்கே அஞ்சல்மூல வாக்களிப்புச் செய்துள்ளனர்.

இவ்வாக்களிப்பில் எமக்கான ஆதரவு என்பதனைவிட அரசியலையும் ஆளுநரினையும் எதிர்த்து வாக்களிப்பது என்பதே அவர்களின் நோக்கமாக இருந்துள்ளது.

இத்தேர்தல் முடிவுகளின் பின்னர் புலம்பெயர் உறவுகள் என்னைத் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்ததோடு வடக்கில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தாம் பங்களிப்புச் செய்வதாகவும் உறுதியளித்துள்ளனர்.

தேர்தலின் பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பணியாற்றுவதில்லைஎன குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

பாராளுமன்ற தேர்தல் என்பது வேறு. அது பாராளுமன்ற அதிகாரங்களைக்கொண்டது. ஆகையினால் மக்களோடு இணைந்து பணியாற்றுவது என்பது கடினமிக்க ஒன்றாகவே காணப்படும்.

ஆனால் மாகாண சபையில் அவ்வாறு நடைபெறாது நாம் மக்களோடு மக்களாக நின்று பணியாற்றுவோம்.

இத்தேர்தல் பிரிந்திருந்த எம்மை ஒற்றுமைப்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சியினைகூட கோருகின்றோம் எம்மோடு சேர்ந்து பணியாற்றுமாறு. அரசின் உதவியில்லாமல் மாகாண சபை நடத்துவது என்பது சற்றுக்கடினம் தான். ஆகையால் எதிர்க்கட்சியும் எம்மோடு இணைந்து செயற்படவேண்டும்.

நாம் சிறந்த சேவையினை வழங்க மக்கள் தொடர்ந்தும் எமக்கு ஆதரவு தரவேண்டும் என்றார் அவர். (அ-4)

# யாழ்.மாவட்ட விருப்பு...

செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பாக. பசுபதி அரியரத்தினம் (27,264), தம்பிராஜா குருகுலராஜா (26,427), சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை (26,132) ஆகியோரும்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக வை.தவநாதன் (3,753) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பாக அன்ரனி ஜெகநாதன் (9,309), சிவப்பிரகாசம் சிவயோகன் (9,296), துரைராஜா ரவிகரன் (8,868), கனகசுந்தரம் சுவாமி வீரபாகு (8,702) வாக்குகளையும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக அகமட் லெப்பை காசீம் (1, 726) வாக்குகளை பெற்றுள்ளனர்.

இதேவேளை மன்னார் மாவட்ட விருப்பு வாக்குகளும் செய்தி அச்சுகக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

(எ-4,250,266)

# 'தனி அரசுக்கு ஆணை'...

தமிழ்த் தேரசியக் கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் 14 ஆசனங்களையும், கிளிநொச்சியில் 3 ஆசனங்களையும், முல்லைத்தீவல் 4 ஆசனங்களையும், மன்னாரில்3 ஆசனங்களையும் வவுனியாவில் 4 ஆசனங்களையுமாக 28 ஆசனங்களையும் போனஸ் ஆக 2 ஆசனங்களையும் பெற்றுள்ளனர்.

இந்த வெற்றிமூலம் தமிரசுக் கட்சி வட மாகாண சபையை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கைப்பற்றியுள்ளது. தமிழரசுக் கட்சியின் வடமாகாண முதலமைச்சராக முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் அடுத்த வாரம் பதவி யேற்பார் என நம்பப்படுகிறது.

இத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து .தேர்தலை எதிர்கொணட போதும் இக் கூட்டணி 7 ஆசனங்களை மட்டுமே கைப்பற்றி படு தோல்வி அடைந்துள்ளது.

ஆளும்கூட்டணியில் இணைந்து செயற்பட்டு வருகின்ற போதும், இத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மன்னார் மாவட்டத்தில் மட்டும் ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு எவ்வித ஆசனமும் கிடைக்கவில்லை.

யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து தொகுதிகளிலும் கூட்டமைப்பு சராசரியாக 84 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது. இதுவரை காலமும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்டுவந்த ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியிலும் கூட்டமைப்பு 65 வீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் வந்துள்ளது.

அதேபோன்று வடமாகாணத்தில் மற்றைய மாவட்டங்களிலும் கூட்டமைப்பிற்கு எதிர்பார்த்ததற்கும் மேலான வெற்றியை மக்கள் வழங்கியுள்ளார்கள். தேர்தலுக்கு முன்னரும் தேர்தலின்போதும், படையினரும் அரசுடன் சேர்ந்தியங்கும் துணைக்குழுக்களும் பெரும் அச்சுறுத்தலை மக்கள் மீது மேற்கொண்டபோதும், இவ் அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாது மக்கள் தமிழரசுக் கட்சிக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தம் ஆணையை மிகவும் தெளிவாகவே வழங்கியுள்ளார்கள். பெரும்பான்மை பலத்துடன் வட மாகாணசபையின் ஆட்சியை கைப்பற்றும் கூட்டமைப்பு, இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு. (எ)

# இந்திய...

மீனவர்களும் மன்னாரில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் நாளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார். (எ)

உன் நோக்கத்தை வாளால் அறுத்துக் கொல்வதைவிட நகை முகத்தால் சாதித்துக் கொள்வதே சாலச் சிறந்தது.
– ஷேக்பியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எவரும் எதிர்பாராத வாக்களிப்பு தமிழரின் வேட்கை தெரிகிறது

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்து கட்சிகள் பெற்ற ஆசனங்களும் அறிவிக்கப்பட்டுள் ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுள்ளது என்ற உண்மையைக் கூறித்தான் ஆகவேண்டும்.

இந்த உண்மைகளுக்குள் தமிழ் மக்கள் எழுச்சியோடு – உணர்வு பூர்வமாக வாக்களித்துள்ள னர் என்பதை நினைக்கும் போது நாம் தமிழனாகப் பிறந்ததில் பெருமை கொள்ளவேண்டும்.

தேர்தல் முடிவுகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி னால், வடமாகாணத்தில் அடங்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தமிழ் மக்களின் வாக்களிப்பு சொல்லி வைத்தது போல தமிழ்த்தேசி யக் கூட்டமைப்புக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தமிழ் உணர்வும் தமிழன் என்ற பற்றும் இம்மியும் குறையாமல் – குலையாமல் இருந்துள்ளதை நினைக்கும் போது கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் கொட்டிக் கொள்கின் றன.

2009ம் ஆண்டு வன்னிப்போரில் தங்கள் உறவுகளைப் பறிகொடுத்து பரிதவித்த அந்த மக்கள் முள்ளிவாய்க்காலில் கால் இழந்து, கையிழந்து, கண் இழந்து அந்தோ! உறவுகளையும் பலிகொடுத்து முட்கம்பி வேலிக்குள் அடைபட்டு, அம்மா பசிக்குது என்று பச்சிளம் குழந்தையின் அழுகை கண்டு இதயம் வெந்து நொந்து சீ. ... என்ன மனித வாழ்வு என்ற வெறுப்பின் எல்லையில்,

மீள்குடியமர்வு என்ற பெயரில் தறப்பாளுக்குள் குந்தியிருந்து பச்சை விறகை ஊதி நெருப்பேற்றி பச்சையரிசிக் கஞ்சி காச்சிக் குடித்தபோதும்,

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் மார்தட்டி நாங்கள் மானமுள்ள தமிழர்; தரையால், கடலால், ஆகாயவெளியால் போரிட்ட மறவர். எங்களை அடிமையாக்க யாராலும் முடியாதென்பதை வாக்குப் பலத்தால் நிரூபித்த எங்கள் அருமந்த தமிழ் உறவுகளை நினைக்க – அவர்கள் தமிழ் மீது கொண்ட பாசத்தை, நேசத்தை, அன்பை நினைக்க அழுகையும் ஆனந்தக் கண்ணீரும் வராமல் வேறென்ன வரும்.

அன்புக்குரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே! ஈழத்தமிழ் மக்கள் தங்கள் கடமையை இந்த உலகில் எவரும் எதிர்பாராத வகையில் செய்து முடித்துள் ளனர்.

வன்னிப்போரில் காலிழந்த தமிழ் மூதாட்டியும் தன்தலையால் நடந்து தன் வாக்கை உங்களுக்கு இட்டு மகிழ்ந்தாள்.

இந்த உண்மையை உங்கள் உயிர் உள்ளவரை மறந்துவிடாதீர்கள்.

தமிழ் மக்கள் திரண்டெழுந்து தமிழனைத் தமிழனே ஆளவேண்டும் என்பதற்குத் தந்த ஆணையை எறிந்து விடாதீர்கள்.

இந்த ஆணையைக் கையில் தூக்கி எடுங்கள். அரசுடன் பேசுங்கள். சர்வதேசத்தை கூவி அழையுங் கள். பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணுங்கள். இது உங்களிடம் தமிழ் மக்கள் தந்த மிகப்பெரும் பொறுப்பு. மறந்து விடாதீர்கள்.

# தமிழருக்கான அரசியல் தீர்வை அடைவதற்கான முயற்சி தொடரும்

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வினை அடைவ தற்கான முயற்சி தொடரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மையுடன் கைப்பற்றி யுள்ள நிலையில் நேற்றைய தினம் யாழ். ரில்கோ விடுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்திரிகை யாளர் சந்திப்பு நடைபெற்றது. இச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 13ஆவது திருத்தச் சட்டம் முழு மையாக அமுல்படுத்தப்படுவதோடு அது கட்டியெழுப்பப்பட்டு அர்த்த புஷ்டியான தீர்வுத்திட்டம் முன்வைக் கப்படல் வேண்டும்.

நியாயமான நடைமுறைப்படுத்தக் கூடிய பொருளாதாரம், கலை கலாசார ரீதியான அபிலாசைகளை வடக்கிலும் கிழக்கிலும் அமுல்படுத்தப்கூடிய வகையில் அரசியல் தீர்வு அமைய வேண்டுமென்பதில் நாம் உறுதியா கவுள்ளோம்.

குறிப்பிட்ட அடிப்படையில் ஆட்சி யினை அமைக்கும் அதிகாரம் சட்டம், நீதி, நிர்வாக அதிகாரம் பகிர்ந்தளிக் கப்படல்வேண்டும். இறைமை மதிக் கப்படல் வேண்டும்.

மாகாண சபையில் முதன்முறை யாக ஆட்சியமைக்கப் போகிறோம். இதன்பின்னர் மாகாண சபையினால் முடியுமான அனைத்து நடவடிக் கையினையும் தமிழ் மக்கள் நலன் கருதி மேற்கொள்வோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களினை விட இத் தேர்தலில் வரலாற்று ரீதியான அமோக வெற்றி பெற்றுள்ளது.

இத்தேர்தலில் ஏனைய தேர்தல்களி னைப்போல் வெற்றி பெறுவது அவ்வளவு சுலபமல்ல. ஏனென்றால் இவ் மாகாண சபைத் தேர்தல் விகிதாசார அடிப்படை யில் நடைபெறும் தேர்தலாகும்.

ஆகையால் இதில் பெற்றி பெறு வது சாதாரணமானதொன்றல்ல; மிகக் கடுமையானதாகும். மக்களின் அமோக ஆதரவிருந்தால் மாத்திரமே வெற்றி பெற முடியும்.

இத்தேர்தல் வெற்றியினையடுத்து இந்தியாவின் ஒத்துழைப்பு அவசியமான தாகும். பொதுநலவாய மாநாடு தொடர் பில் இந்தியா எடுக்கவுள்ள நிலைப்பாடு எமது பிரச்சினைக்கு தீர்வு காணும் படியாக அமைதல் வேண்டும்.

இந்தியா எமது பிரச்சினையில் ஆரம் பம் முதல் அக்கறையாகத்தான் இருந்து வந்தது துரதிர்ஷ்டவசமாக இடைநடுவில் பங்களிப்பு குறைவடைந்து இந்தியா பார்வையாளராக இருந்தது.

ஆனால் யுத்தத்தின் பின்னர் மீண்டும் இந்தியா எம்மீது அக்கறை வைத்துள்ளது.

இந்தியாவின் கருத்தினை சர்வதே சம் நிராகரிப்பதில்லை. ஆகையினால் இந்தியா கூறுவதனை சர்வதேசம் நிச்சயம் ஏற்றுக் கொள்ளும்.

அண்மையில் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்படவிருந்த போதிலும் இந்தியாவின் தலையீட்டையடுத்து இடை நிறுத்தப்பட்டது. இவ்வாறு இந்தியா தொடர்ந்தும் உதவவேண்டும்.

அரசிற்கு எதிராக ஆயுதம் ஏந்திய தமிழ்க் குழுக்கள் இங்கு இருந்தபோது இராணுவத்தினரும் இங்கு இருந்தனர். ஆனால் இன்று நிலைவேறு. தேவைக் கதிகமான இராணுவத்தினர் உள்ளனர்.

ஒரு நாட்டில் இராணுவத்தினர் செய்ய வேண்டியதற்கப்பால் விவசாயம், வியாபாரம் செய்கின்றதோடு தேவை யற்ற விடயங்களிலும் தலையிடுகின்றனர்.

இவ் இராணுவ நடமாட்டம் தொடர் பில் ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுவும் கவனம் செலுத்தியிருந்தது.

இப்போதாவது நடைமுறைகளினை மாற்றி அரசு செயற்பட வேண்டும் என்றார் இரா. சம்பந்தன். (செ–4)

## இலங்கை அகதிகள் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டம்

தமிழகம், புதுக்கோட்டையிலுள்ள இலங்கை அகதிகள் ஒரு நாள் உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

புதுக்கோட்டை தோப்புக்கொள்ளை யில் அமைந்துள்ள அகதிகள் முகாமைச் சேர்ந்த அகதிகளே இவ்வாறு உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் தலை வர்கள் பட்டியலிலிருந்து இலங்கையை தற்காலிகமாக நீக்க வேண்டும். தமிழ கத்திலுள்ள 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட இலங்கை அகதிகளை ஐ.நா அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் அங்கீகரித்து பெயர்களை இணைத்துக்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள அகதி களை விருப்பத்திற்கு மாறாக இலங் கைக்கு அனுப்பக்கூடாது ஆகிய கோரிக்கை களை முன்வைத்தே இவர்கள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன் னெடுத்துள்ளனர். (அ–2)

## மக்களின் பூரண ஆதரவிற்கு த.தே.கூட்டமைப்பு நன்றி தெரிவிப்பு

எமது மக்கள் முழுமையாக எம்மை ஆதரித்தற்காக எங்கள் இதய பூர்வமான நன்றிகளினை தெரிவித்துக் கொள்கின் றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013 முடிவுகள் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக் கையிலேயே மேற்கண்டவாறு மக் களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – இலங் கைத் தமிழ் அரசுக் கட்சி நாட்டின் அரசியல் சரித்திரத்தில் முன்னெப் போதும் ஒருவரும் அடையாத அமோக வெற்றியீட்டியுள்ளது.

வடமாகாணத்தில் ஏறத்தாழ 80 வீதமான ஆசனங்களையும் யாழ்ப் பாண மாவட்டத்தில் ஏறத்தாழ 90 வீதமான ஆசனங்களையும் கைப்பற்றி யுள்ளது.

மக்களின் ஜனநாயகத் தீர்ப்பு மிக வும் தெளிவானதாக உள்ளது. ஐக்கிய, பிளவுபடா நாட்டிற்குள் பாதுகாப்பா கவும், சுயமரியாதையோடும், கௌரவ மாகவும், போதிய சுயாட்சி பெற்று வாழ்ந்து தமது நியாயமான அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, அபிலாசைகளை அடைய விரும்புகி றார்கள்.

இந்த இலக்கை அடைவதற்கு நாம் அர்ப்பணிப்போடு செயற்படும் அதே வேளையில், அரசாங்கமும் தனது பங்களிப்பை முழுமையாகச் செய்யும் என்று எதிர் பார்க்கிறோம். இந்தத் தேர்தலின் பெறுபேறுகள் அனைவரும் ஆரோக்கியமான திசையில் பயணிப் பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை தந்திருக்கி றது.

இந்தத் தேர்தலில் தாம் சந்திக்க நேர்ந்த பலவிதமான துன்புறுத்தல் களின் மத்தியிலும் வட மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் தெளிவாகவும் துணிவாகவும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஜனநாயகத் தீர்ப்புக்கு மதிப்பளிக்கப்பட வேண்டுமென நாம் வற்புறுத்திக் கேட்கி றோம்.

எமது மக்கள் முழுமையாக எம்மை ஆதரித்ததற்காக எங்கள் இதயபூர்வ மான நன்றிகளைத் தெரிவித்துக் கொள் ளும் அதே வேளையில் அவர்கள் தமது அபிலாசைகளை அடைவதற்கு எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று கூறவிரும்புகிறோம். (செ–1)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை


### தன்னிறைவுக்கான வழி



மேல்நாட்டிலே கூட இந்தியவை ஏழை நாடு ஏழை நாடு என்று நாட்டிலே என்ன குறைவு? இதைத்தான் நான் உங்களிடம் கேட்கின்றேன். இயற்கை வளத்திலே குறைவா அல்லது ஞானத்திலே தான் இந்த நாடு குறைந்து விட்டதா? எவ்வித குறைபாடும் இல்லை. இன்று இந்தியநாட்டிலே படித்து பட்டம் பெற்ற உலகம் முழுவதும் சிறந்து விளங்கு கின்றார்கள். பல நாடுகளை இவர்கள் வளப்படுத் துகின்றனர். இத்தகைய முறையிலே இன்று இந்தியா நாடு எல்லா நாடுகளுக்கும் விஞ்ஞானி களை ஏற்றுமதி செய்து கொண்டு இருக்கின்றது என்றால் இது தவறன்று. நான் நேரடியாகச் சென்று பார்த்ததைத்தான் கூறுகின்றேன். இந்த முறையிலே இந் நாட்டிலே விஞ்ஞான அறிவானது அந்த அளவிற்குத் ததும்பி இருப்பதைக் காண்கின்றோம். இவ்வாறு இருந் தும் என்ன குறைபாடு என்று கூறினால், அரசியல் முறையிலே இருக்கக் கூடிய ஊழல் கள் தான் இதற்குக் காரணம். ஒழுங்கான அரசியலை நம்மால் அமைத்துக் கொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம் அந்நிய நாட்டு ஆட்சியே பட்ட பண்பாடானது அப்ப டியே தொக்கி நிற்கின்றது. இன்னும் நமக்கேற்ற முறையிலே நாம் வாழ்க்கையைத் தெரி ந்து கொள்ளவில்லை.


வாழ்க்கையை தெரிந்து கொள்ள வேண்டுமானால், வாழ்வாங்கு வாழ வேண்டு மானால், ஒவ்வொரு மனிதனுக்கும் ஐந்து துறைகளிலே அறிவு வேண்டும். அவை அறிவு, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம் ஆகிய ஐந்தும் வாழ்க்கைத் தத்துவங்கள். வாழ்க்கைக்கு இந்த ஐந்தும் தேவை. ஒவ்வொரு மனிதனும் இந்த ஐந்தி லேயும் நிறைவு பெற வேண்டும். சிறு குழந்தை முதற்கொண்டு 15,20 ஆண்டுகள் வரை யிலே இந்த ஐந்து துறைகளிலும் அறிவு பெற வேண்டும். அதன் பின்பு வாழ்க் கையிலே புகுந்தால் தன்னிறைவாக இருக்கும். யாரிடமும் ஒன்றும் கேட்க வேண்டியதே இல்லை. எல்லாவற்றையும் அவரவரே உணர்ந்து திருந்தி அவர்கள் செயற்பாடுகளைச் செய்வதற்கு நல்ல வாய்ப்பிருக்கும்.


# யாழ். மாவட்டம்



க.வி.விக்னேஸ்வரன்
இ.த.அ.க.-132255


திருமதி அனந்தி சசிதரன்
இ.த.அ.க. -87870


த.சித்தார்த்தன்
இ.த.அ.க.-39715


இ.ஆனல்ட்
இ.த.அ.க.-26888



சி.வி.கே.சிவஞானம்
இ.த.அ.க.-26747



பா.கஜதீபன்
இ.த.அ.க.-23699



எம்.கே.சிவாஜிலிங்கம்
இ.த.அ.க.-22660


பொ.ஐங்கரநேசன்
இ.த.அ.க.-22268


சு.சுகிர்தன்
இ.த.அ.க.-20541


கே.சயந்தன்
இ.த.அ.க.-20179


கே.என்.விந்தன் கனகரத்தினம்
இ.த.அ.க.-16463



அ.பரஞ்சோதி
இ.த.அ.க.-16359



க.சர்வேஸ்வரன்
இ.த.அ.க.-14761


வே.சிவயோகன்
இ.த.அ.க.-13479


க.கமலேந்திரன்
ஐ.ம.சு.மு.-13632


பி.சத்தியலிங்கம்
இ. த.அ. க.-19656



கே.லிங்கநாதன்
இ. த.அ. க.-11901



ஐ.இந்திரராஜா
இ. த.அ. க.-11535

# கிளிநொச்சி மாவட்டம்


பசுபதி அரியரத்தினம்
இ.த.அ.க.-27264


தம்பிராஜா குருகுலராஜா
இ.த.அ.க.-26427



சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை
இ.த.அ.க.-26132



வை.தவநாதன்
ஐ.ம.சு.மு.-3753

# முல்லைத்தீவு மாவட்டம்



அன்ரனி ஜெகநாதன்
இ.த.அ.க.-9309


சி.சிவமோகன்
இ.த.அ.க.-9296


து.ரவிகரன்
இ.த.அ.க.-8868


கனகசுந்தரசுவாமி
இ.த.அ.க.-8702


இ.அங்கஜன்
ஐ.ம.சு.மு.-10034


அகமட் லெப்பை காசீம்
ஐ.ம.சு.மு.-1,726

**வடக்கு மாகண சபைத் தேர்தலில் மாவட்ட ரீதியில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள்**

# வவுனியா மாவட்டம்


எம்.தியாகராசா
இ. த.அ. க.-11681


த.சேனவிராத்ன
ஐ.ம.சு.மு.-5148


எ.ஜெதிலக
ஐ.ம.சு.மு.-4806

# சுப்பர் கிங்ஸ் வெற்றி

டைட்டன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.



இந்தியாவில் ஐந்தாவது சாம்பியன்ஸ் 'லீக் இருபது 20 தொடர் நடைபெறுகிறது.


இத்தொடரின் மூன்றாவது போட்டியில் பி பிரிவில் இடம் பெற்ற போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், டைட் டன்ஸ் அணிகள் மோதின.

ராஞ்சியில் நடைபெற்ற இப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி டைட்டன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஹென்ரி டேவிட்ஸ் 52 ஓட்டங்களும், ஜாக்ஸ் ருடால்ப் 21 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து டி வில்லியர்ஸ், பெகார்டியன்ஸும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டி வில்லியர்ஸ் 36 பந்துகளில் 7 சிக்ஸர், 4 நான்கு ஓட்டம் உட்பட 77 ஓட்டங்களை பெற்றார். டைட்டன்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 185 ஓட்டத்தினை பெற்றது. 186 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி ஹசி, ரெய்னா, பிராவே ஆகியோரின் சிறப்பான ஆட்டம் மூலம 18.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு தனது வெற்றி இலக்கினை அடைந்தது.



இப்போட்டியில் ஆட்ட நாயகனாக சென்னை அணியின் ரெய்னா தெரிவானார்.

# மும்பையை வீழ்த்தியது ராஜஸ்தான்

சம்பியன்ஸ் லீக் இருபது -20 தொடரின் முதலாவது போட்டியில், நடப்பு ஐ.பி.எல் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி தோற்கடித்துள்ளது. 7 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி இப்போட்டியில் வெற்றிபெற்றுள்ளது.



ஜெய்ப்பூரில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்த அவ்வணி, 8.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களுடன் தடுமாறியது. அதன் பின்னர் ரோகித் சர்மா, கெரான் பொலார்ட் இருவரும் இணைப்பாட்டத்தைப் புரிந்து மும்பை இந்தியன்ஸ் அணிக்கு போராடக்கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக ரோகித் சர்மா 37 பந்துகளில் 44 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 36 பந்துகளில் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக விக்ரமஜீத் மலிக் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஷேன் வொற்சன், ஸ்ருவேர்ட் பின்னி இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 19.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

5 ஓட்டங்களுக்கே முதலாவது விக்கெட்டை இழந்த ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, அதன் பின்னர் 2ஆவது விக்கெட்டுக்காக 74 ஓட்டங்களைப் பகிர்ந்தது. அவ்வணியின் மத்திய வரிசை வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அவ்வணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிசாரபாக சஞ்சு சம்சொன் 47 பந்துகளில் 54 ஓட்டங்களையும், அஜின்கியா ரஹானே 31 பந்துகளில் 33 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் பின்னி 14 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், ஷேன் வொற்சன் 22 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக நேதன் கோர்ட்டர் நீல், ரிஷி தவான், கெரான் பொலார்ட் மூவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் விக்ரம்ஜீத் மலிக் தெரிவானார்.

# மெட்ராஸ்...

யாழ்ப்பாணம், சாவகச்சேரி சுன்னாகம், நெல்லியடி போன்ற பல்வேறு நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள எல்.சி.டி பனல் ஊடாகவே இத்திரைப்படம் திரையிடப்பட்டு வருகின்றது.

முன்னர் அரசாங்கத்தினாலும் இராணுவத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வந்த அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான காணொளிகள எல்.சி.டி பனல் ஊடாகவே ஒளிபரப்பாகியது. அதிலேயே "மெட்ராஸ் கஃபே" திரைப்படம் காட்சிப்படுத்தப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு நிர்வாகத்...

'கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற வரலாற்று முக்கியத்துவ மிக்க மாகாண சபைத் தேர்தல்கள் குறித்து நாம் இலங்கை மக்களைப் பாராட்டுகின்றோம். தேர்தல்கள் இடம்பெற்ற 3 மாகாணங்களிலும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் வாக்களிப்பில் பங்கேற்றமையானது ஜனநாயக நடைமுறைக்கு கிடைத்த வெற்றியாகும்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் நாம் தொடர்ந்தும் கரிசனை கொண்டிருக்கின்றோம். அதேவேளையில் வெவ்வேறு தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் வெளிப்படையானதும் சுயாதீனமானதுமான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றமிழைத்தவர்கள் நீதியின் முன் விரைவில் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்.

சீருடை அணிந்தவர்கள் இந்த சம்பவங்களில் சம்பந்தப்பட்டுள்ளதாக வந்துள்ள தகவல்கள் குறிப்பாக கவலையளிப்பதாகவுள்ளது. யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப் பட்டு 4 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வட மாகாணத்தில் உரிய சிவில் நிர்வாகத்தை ஸ்தாபிப்பதற்கும் நல்லிணக்க நடைமுறையை முன்னெடுப்பதற்கும் வன்முறை மற்றும் அச்சுறுத்தல் இன்றிய நடைமுறையானது அவசியமானதாகும்.

இதற்கான ஆரம்பமாக இந்த தேர்தல்கள் அமைந்துள்ளது. ஜனநாயகம் என்பது வெறுமனே தேர்தல்களோடு நின்றுவிடுவதில்லை. அனைத்து சமூகங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் தமக்கு உரித்துடைய சமாதானத்துடனும் கௌரவத்துடனும் வாழத்தக்க வகையில் இன்னும் அதிகமாக செயலாற்ற வேண்டியுள்ளது.(செ-11)

# அரசுடன் பேச...

ஈழத் தமிழர்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும் இணைந்து பணியாற்ற தயாராக இருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சராக தெரிவாகியுள்ள சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துளளார்.

மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமோக வெற்றிக்கு பின் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கின் புதிய மாகாண சபை சில இடங்களில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவையுள்ளது.

நாம் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற தயாராக இருக்கின்றோம். இது அரசாங்கத்துடன் நாங்கள் இணைந்து கொள்ள போகிறோம் என்று அர்த்தமல்ல.

மாகாணங்களுக்கான பொலிஸ மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட பல எதிர்கால பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய பின்னர் புதிய மாகாண சபை பதவியேற்கும்.

தென் பகுதி மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றுவது தொடர்பில் தென் பகுதி அரசியல்வாதிகள் அந்த மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும்.

அரசுடன் பேசியே 13ஆவது திருத்தத்தினை நடைமுறைப் படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள் ஆகையால் அரசிடம்தான் எமக்கான தீர்வினை கோரமுடியும்.

இராணுவத்தில் உள்ள ஒருவர் ஆளுநராக இருக்கும் போது பிரச்சினை ஏற்படத்தான் செய்யும்.

இராணுவம் மக்களின் பிரச்சினைகளை அறிய வாய்ப்பில்லை.

அரசுடன் ஆக்கபூர்வமாக பேசுவோம்.

ஆனால் இணையமாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கில் பெரு வெற்றியீட்டியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயலாற்றுவதற்கும் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வடக்கின் முக்கிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தினால் இதுவரை முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை இனி தமிழ்த் தேசியக கூட்டமைப்பு முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

வடக்கு மாகாண மக்களினால் வழங்கப்பட்ட ஆணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டிக் காக்க வேண்டும்.

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளது.

குறிப்பாக மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளோம்.

மாகாணத்தின் இளைஞர் யுவதிகளின் அபிவிருத்தியை கூட்டமைப்பு உறுதி செய்ய வேண்டும்.

தேசிய நலன்களையும் நாட்டின இறையாண்மையையும் பாதுகாக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.(செ-4)

# பான் கீ ...

ஜனாதிபதி அமெரிக்காவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தின் 68-ம் அமர்வுகளில் நாளை 24ம் திகதி ஜனாதிபதியின் உரை இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பல நாட்டுத் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திப்புக்களை நடத்துவார் எனக் குறிப்பிடப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, டலஸ் அழகப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜின் வாஸ் குணவர்தன, லொஹான் ரத்வத்த, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் ஜனாதிபதியுடன் நியூயோர்க் விஜயத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர். (செ-11)

# அதி கூடிய விருப்பு...

களைப் பெற்றுள்ளார்.

வடக்குமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட சகல வாக்காளர்களிலும் சி.வி. விக்னேஸ்வரனுக்கே அதி கூடிய விருப்புவாக்குகள் கிடைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணத்தின் முதல மைச்சர் வேட்பாளராக சிவிவிக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமித்த போது வலம்ரி அதனை வரவேற்று - வலியுறுத்தி ஆசிரீயர் தலையங்கம் எழுதியிருந்தது.

எனினும் சிலர், விக்னேஸ்வரன முதலமைச்சர் வேட்பாளராக வருவதைத் தடுக்கும வகையில், வட பகுதியிலுள்ள புத்திஜீவிகள் அவரை விரும்பவில்லை என்றும் விக்னேஸ்வரன் அரசியலுக்கு வரமாட்டார் என்றும் கதைகட்டியதோடு அவருக்கு எதிராக விசமத்தனமான பரப் புரைகளையும் மேற்கொண்டனர்.

எனினும் சி.வி. விக்னேஸ்வரனே பொருத்தமான முதலமைச்சர் வேட்பாளர் என்பதை வலமபுரி தனது ஆசிரியர் தலையங்கத்தில் பல தடவைகள் வலியுறுத்தியதுடன் அவருக்கு எதிரான சவால்களை முறியடிப்பதிலும் வெற்றி கண்டது.

புத்திஜீவிகள் சி.வி.விக்னேஸ் வரனை விரும்பவில்லை என்ற ஒரு சிலரின் பரப்புரைகளின் மத்தியில், ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் ஒருலட்சத்து 32 ஆயிரத்து 255 என்ற அதி கூடிய விருப்பு வாக்குகளைப்பெற்றுள்ளமை அவர் மீது தமிழ்மக்கள் கொண்ட நம்பிக்கையையும் அவர் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டதன் காரணமாகவே தமிழ் மக்கள் இத்துணை ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர் என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந)

# அரசுடன்...

எந்த வகையிலும் திருப்தியடைய முடியாது.

மனித உரிமை ஆணையாளர் இலங்கை சர்வாதிகாரத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாக வெளியிட்ட அபாய அறிவிப்பை உறுதிப்படுத்த ரத்துபஸ்வல துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தை உதாரணமாக காட்டலாம்.

அரசாங்கம் மேலும் தாமதிக் காமல் தேசியப் பிரச்சினைக்கு காரணமான அரசியல் விடயங்கள் தொடர்பாக புரிந்து கொண்டு அதற்கான தீர்வை வழங்க வேண்டும்.

அரசாங்கத்தை உரிய வழிக்கு கொண்டு வரும் கடமை மக்களுக்கும் உள்ளது. மக்கள் இவ்வாறு தமது சுதந்திரத்திற்காக குரல் கொடுக்காது போனால் நாடு சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்க நேரிடும் என்றார். (செ-11)


2014 தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது.

வெற்றிச்சிகரம் (10 மாதிரி வினாத்தாள்கள்)
விடைகளோடு விலை ரூ. 200
ஆக்கம் : திருமலை S.கணேசலிங்கம்

வெற்றிக்கு வழிகாட்டி தரம் 4
(12 மாதிரி வினாத்தாள்கள்) விடைகளோடு விலை ரூ. 240
ஆக்கம் : M. சுகந்தன் - யாழ்ற்ரன் கல்லூரி

வெற்றிக்கு வழிகாட்டி தரம் 3
(12 மாதிரி வினாத்தாள்கள்) விடைகளோடு விலை ரூ. 240
ஆக்கம் : திருமதி. இராஜேஸ்வரி - யாழ்ப்பாணம்

புலமைச்சங்கமம்
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் 077 6258778
(C-4774)

தொழில் வாய்ப்பு
தமிழ், ஆங்கில டைப்பிங் தெரிந்தவர்கள்
போட்டோக் கொப்பி இயக்குனர்
அச்சக வேலையில் அனுபவமுடையோர்
புத்தகம் கட்டுநர்
உதவியாளர்கள்
021 221 7030
(3995)

Digital
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்
- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-4779)

WESTERN UNION
MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062

STUDY in UK
No Advance payments
Sep/Dec Intake started now
- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.

நீங்கள்
City&Guilds B1 or IELTS
பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாக இருந்தால் உங்களுக்காக, எமது நிறுவனம் "கல்லூரிக்கட்டணம்" மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு பணத்தை செலவு செய்கின்றது.
(சி/4784)

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள். *பரீட்சையில்100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்.

CITY & GUILDS APPROVED CENTRE

கடந்த 6 மாதங்களில்
30 மாணவர்களிற்குமேல்
City&Guilds(UK)
English Diploma (A1,B1)
பரீட்சையில் சிறந்த,
அதிசிறந்த பெறுபேறுகளை
பெற்றுக்கொண்டுள்ளனர்

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri
T.P: 0779 265447,021 7200 989
e mail: chec.usr@gmail.com Gov.Reg No:TN/DS/UC/0324
சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகில்

SISIL 50 YEARS OF GOLDEN CELEBRATION
ஐம்பது வருட பெருமை
SISIL 50th ANNIVERSARY
பெருமைமிக்க சிசில் உற்பத்திகள் அனைத்தையும் இப்பொழுது சிசில் வேர்ல்ட் வழங்குகிறது

வட்டி இல்லாத கொடுப்பனவு
பண்டமாற்றுக் கொடுப்பனவு
50% வரை விலைக் கழிவு
3 வருட உத்தரவாதம்
ஏராளமான மாதிரிகள்
விசேட விலைக் கழிவு

இலவசம்
வட்டி அற்றது
SISIL SL- R 192
மாதாந்தம் ரூ 3,012/-
ரூ 45, 999/-
Double Door with Separate freezer Defrost

SISIL SL KR 72V
இலவசம்
வட்டி அற்றது
மாதாந்தம் ரூ 2,686/-
ரூ 40, 999/-
Single Door with Separate freezer Defrost

புதிய அறிமுகம் R600A Gas சகிதம்
SISIL SL Ecok72V
மாதாந்தம் ரூ 3,393/-
ரூ 45, 999/-
Single Door with Separate freezer Defrost

Whirl Pool R-WRMM-24 LX
Ice Twister, No Frost
இலவசம்
வட்டி அற்றது
மாதாந்தம் ரூ 4,188/-
ரூ 63, 999/-

SISIL SL-SW25R
இலவசம்
வட்டி அற்றது
Double Door No Frost 5cu.FT
மாதாந்தம் ரூ 4,254/-
ரூ 64, 999/-

மாதாந்தம் ரூ 3,120/-
ரூ 58, 999/-
Naple Sofa WF NAPLE (3+1+1)

இலவசம்
Shoe Rack LF - Opensr
மாதாந்தம் ரூ 2,882/-
ரூ 43, 999/-
3 Door Wardrobe LF 3D WD

ரூ11,100 விலைக்கழிவு
வட்டி அற்றது
39,899/-
TCLED32b2500
32' LED, HD Ready

ரூ3,000/- விலைக்கழிவு
வட்டி அற்றது
மாதாந்தம் ரூ 2,228/- தொடக்கம்
Samasung Smgua22ES5000 22' LED, Full HD

ரூ 700 வரை விலைக்கழிவு
மாதாந்தம் ரூ 523/- தொடக்கம்
SISIL Gas Cooker

Smasung SMARTV
Smguaf6400Smgua 46F8000
Smgua 55F 8000
மாதாந்தம் ரூ 9,999/- தொடக்கம்
3D Blu Ray பிளேயர் ஒன்று இலவசம்
40". 46". 55" Smart தொலைக்காட்சிகளுக்கு

SYM-DIET -81
1200 BTU தொடக்கம்
15% விலைக் கழிவு
900 BTU தொடக்கம் TCL
10% விலைக் கழிவு
மாதாந்தம் ரூ 784/-

இலவசம்
மாதாந்தம் ரூ 2,559/-
ரூ 38, 899/-
SISIL SLSWMFR72 Fully Auto

SISIL WORLD
The World at your doorstep

சிசில் வேல்ட் இன் விசேட விற்பனைக் கூடம் தற்பொழுது மின்சார நிலைய வீதியில் (பஸ் நிலையம் பின்பாக) அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அனைத்துவித மின் மற்றும் இலத்திரனியல் சாதனங்களையும் வீட்டுத் தளபாடங்களையும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
இல.106, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9291

(C-4783)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.